பக்கங்கள் - 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka
மின்னிதழ்
# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 04 ஞாயிற்றுக்கிழமை (17.05.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

# முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை
# எமது இருப்பிடங்களில் நினைவேந்துவோம்
## தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**மே 18 முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 11 ஆவது நினைவு தினமான நாளை திங்கட்கிழமை மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையான காலப் பகுதியில் எமது வீடுகளில் இருந்து சுடரேற்றி நினைவேந்தலினை மேற்கொள்ளுமாறு தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மே 18 முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் 11ஆவது நினைவு தினத்தினை தமிழ்த் தேசமும் உலகெங்கும் வாழும் தமிழ் உறவுகளும் நாளை திங் கட்கிழமை (2020 மே, 18) நினைவேந்த வுள்ளன.

வெற்றுக்கோசமாகிப்போன பொறுப்புக்கூறல், சர்வதேச விசாரணை மற்றும் உலகப் பெரும் தொற்றாகிய கொரோனோ என்பவற்றிற்கிடையில் நாம் இம்முறை இந்த நினைவு தினத்தினை எதிர்கொள்கின்றோம்.

தமது சுதந்திரமான வாழ்வியலுக்காகவும் விடுதலைக்காகவும் போராடிய தமிழ் மக்களின் மூன்று தசாப்தகால

02

# இலங்கையில் சூறாவளி அபாயம்
## வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

தென்கிழக்கு வங்காள விரிகுடா கடற்பரப்புகளிலும் அண்மையாகவுள்ள கடற்பரப்புகளிலும் விருத்தியடைந்துள்ள குறைந்த அழுத்தப் பிரதேசம் அதே கடற்பரப்பில் ஒரு தாழமுக்கமாக விருத்தியடைவதுடன் தென் வங்காள விரிகுடா கடற்பரப்பிற்கு மேலாக ஒரு சூறாவளியாக வலுவடையக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அத்துடன் அது வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியத்தைக் கொண்டிருக்கிறது.

இதன் தாக்கம் காரணமாக நாடு முழுவதும், குறிப்பாக நாட்டின் தென்மேற்கு பகுதியில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ

02

## நேற்று மட்டும் 22 பேர்
# கொரோனாவால் பாதித்தோர் 957 ஆக உயர்வு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 957 ஆக அதிகரித்துள்ளது. நேற்று 22 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட

02

# தென்னிலங்கையில் கடும் மழை

இருவர் உயிரிழப்பு



02

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது

அரசாங்கம் கைவிரிப்பு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது எனவும்

02

## கந்தரோடையில்
# இளைஞன் சடலமாக மீட்பு!

(சுன்னாகம்)

சுன்னாகம் கந்தரோடை மடத்தடியில் நேற்றுச் சனிக்கிழமை காலை இளைஞரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

02

# இன்று நாடு முழுவதும் ஊரடங்கு

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்றிரவு 8 மணி முதல் திங்கட்கிழமை அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹாவை தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் நாளை 18ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கும் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் மே மாதம் 23ஆம் திகதி வரை இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மாத்திரம் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கையை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் கடந்த 11ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நாளை 18ஆம் திகதி திங்கட்கிழமை முதல்

02

# நோய் அடையாளம் காட்டாதவர்கள் சமூகத்தில் நடமாட வாய்ப்புள்ளது
## தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு

(கொழும்பு)

கோவிட் -19 வைரஸ் சமூக பரவலாக இல்லை என்பதற்காக நாட்டில் முழுமையாக கோவிட் - 19 தொற்றாளர்கள் இல்லை என்ற அர்த்தம் கொள்ளமுடியாது. எங்காவது ஒரு சிலர் எமது பரிசோதனைகளில் இருந்து விடுபட்டு நோய் அறிகுறிகள் காட்டப்படாது சமூகத்தில் நடமாட வாய்ப்புகள்

02

# சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கத் தீர்மானம்
## சுற்றுலாத்துறைத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது பொருளாதாரத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையில், எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து நாட்டிற்குள் சுற்றுலாப்பயணிகளை அனுமதிப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாக இலங்கை சுற்று

02

## கொரோனாவால் பாதித்தோர்...

428 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்ற நிலையில் 520 பேர் வைரஸ் தொற்றில் இருந்து பூரண குணமடைந்துள்ளனர்.

இதேவேளை, இதுவரை கொரோனா தொற்றால் 9 மரணங்கள் பதி வாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## சுற்றுலாப் பயணிகளை அனுமதி...

லாத்துறை அறிவித்திருக்கிறது.

கோவிட் - 19 கொரோனா வைரஸ் பரவல் இலங்கையில் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இருப்பினும் இலங்கை தொடர்பான தோற்றப்பாட்டையும், நாட்டிற்குள் உள்ளீர்க்கும் சுற்றுலாப் பயணிகளின் வரையறையையும் மாற்றியமைப்பதற்கான ஒரு வாய்ப்பாகவே நாம் இதனைக் கருதுகின்றோம் என்று இலங்கை சுற்றுலாத்துறையின் தலைவர் கிமாலி பெர்னாண்டோ வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருக்கிறார்.

அந்த நேர்காணலில் அவர் மேலும் கூறியிருப்பதாவது.

எதிர்வரும் ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இலங்கைக்குப் பயணம் செய்வதற்கான முன் பதிவுகளை மேற்கொள்வதற்கான கோரிக்கைகள் அதிகரித்திருக்கின்றன. எமது விமானநிலையங்கள் மீளத்திறக்கப்படும் திகதி குறித்து ஜேர்மன் மற்றும் இந்திய நாடுகளின் சுற்றுலாத்துறை முகவர்கள் தொடர்ச்சியாக அக்கறை காண்பித்து வருகிறார்கள். இந்தியா, லண்டன், ஜேர்மன் மற்றும் சீனா ஆகிய நாடுகள் இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான முக்கிய சந்தைகளாக உள்ளன.

குறைந்தளவான கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் மற்றும் குறைந்தளவு மரணங்கள் பதிவாகியுள்ள இலங்கை, நீண்டகால விடுமுறையை அனுபவிக்க விரும்புபவர்களின் விருப்பத்தெரிவாக மாறியிருக்கிறது.

தற்போது பொருளாதாரத்திற்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையில், எதிர்வரும் ஜுலை மாதத்திலிருந்து நாட்டிற்குள் சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். நீண்ட நாட்கள் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகள் எமக்கு அவசியமாகிறார்கள். எனவே 5 வருட காலத்திற்கான நீண்டகால வீசா வழங்குவதற்கும் திட்டமிட்டு வருகின்றோம் என்றார். (ஞா)

## இலங்கையில் சூறாவளி அபாயம்...

மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

தென், மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில், குறிப்பாக ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (ஞா)

## வழங்கிய வாக்குறுதிகளை நிறை...

அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை செலுத்த முடியாத சிரமமான மட்டத்தில் அரசாங்கம் இருப்பதாகவும் அமைச்சரவையின் இணை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கொரோனா என்ற உலக தொற்று நோய் இல்லாத சமயத்தில் அந்த வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. நீங்கள் அனைவரும் நடைமுறையில் இதனை காண்கின்றீர்கள். உலக வரலாற்றில் இப்படியான சம்பவம் ஏற்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுதான்.

தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகளை அதே விதத்தில் நிறைவேற்ற முடியாது. மக்களுக்கு அன்றாடம் சம்பளத்தை வழங்க பொது மக்களிடம் பணத்தை சேகரிப்பதில் கூட சிக்கல் இருக்கின்றது.

அரச சேவையை முன்னெடுத்துச் செல்லுதல், பெற்ற கடனுக்கான தவணை மற்றும் வட்டியை செலுத்துதல், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்குதல், ஓய்வூதியக் கொடுப்பனவு, சமுர்த்தி நிவாரண நிதியை வழங்குதல் என இவை அனைத்தும் அரசுக்கு கிடைக்கும் வருமானத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இது எவருடைய பணமும் அல்ல, பொதுமக்களின் பணம். இந்தப் பணத்தில் இருந்து கிடைக்கும் அனைத்து வருமானங்களும் கடந்த மாதங்களில் நின்று போயுள்ளன எனவும் பந்துல குணவர்தன குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## இளைஞன் சடல...

அப் பகுதியைச் சேர்ந்த அருமைத்துரை சசிதரன் (வயது - 26) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ஞா-18)

## இன்று நாடு முழு...

வேலைத்திட்டங்கள் பலவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் நாட்களில் தனிமைப்படுத்தல் சட்டங்களுக்கமைய செயற்படுமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. (ஞா)

### வவுனியா சிறிராம புரத்தில்

# வர்த்தக நிலையம் தீயில் எரிந்து நாசம்

(கொழும்பு)

வவுனியா சிறிராமபுரத்தில் அமைந்துள்ள பலசரக்கு விற்பனை நிலையம் ஒன்று நேற்றிரவு தீப் பிடித்து எரிந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா காத்தார் சின்னக்குளம் வீட்டுத்திட்டம் திருஞானசம்பந்தர் வீதியில் அமைந்திருந்த பல்பொருள் வியாபார நிலையமே நேற்றிரவு 8 மணியளவில் திடீரென தீப்பற்றியெரிந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

குறித்த வர்த்தக நிலையம் நேற்றிரவு மூடப்பட்டிருந்த நிலையில் இரவு 8மணியளவில் புகை வெளிக்கிளம்பியுள்ளது.

அதனை அவதானித்த சிலர் தீயை அணைக்க முற்பட்டதுடன் நகரசபையின் தீயணைப்பு பிரிவினருக்கும் தகவல் தெரிவித்திருந்தனர்.

அதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா நகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயை கட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

எனினும் கடை முழுவதுமாக தீப்பற்றி எரிந்ததனால் கடையினுள் இருந்த சுமார் பத்து லட்சம் பெறுமதியான பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாகவும் மின் ஒழுக்கினாலே இவ் விபத்து சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)

### ஐ.நா வின் பயங்கரவாத தடைக்குழுவின் வழிகாட்டியில்

# இலங்கையும் உள்ளடக்கம்

(ஜெனிவா)

இலங்கை உள்ளிட்ட சார்க் அங்கத்துவ நாடுகளை உள்ளடக்கிய ஒரு வழிகாட்டியை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பயங்கரவாதத் தடைக்குழு தயாரித்து வருகிறது.

அதில், தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டம் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அதேவேளை, உரிய சட்ட திட்டங்களுக்கு அமைவாகவுமே இடம்பெறுவதை உறுதிசெய்யும் வகையில் தயாரிக்கப்படுகிறது.

இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சுதந்திரம், நியாயத்துவம் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த அறிவு என்பன முறையானதொரு நீதித்துறைக்கு, குறிப்பாக தீவிரவாதம் சார்ந்த வழக்குகளில் மிகவும் அவசியமானவையாகும். (ஞா)

## தென்னிலங்கை...

கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டின் சில இடங்களில் பெய்த மழையை அடுத்து ஏற்பட்ட அனர்த்தத்தால் இருவர் உயிரிழந்துள்ளனர்.

1805 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் தற்போது கடும் மழையுடன் கூடிய வானிலை நிலவுகின்றது.

எதிர்வரும் சில தினங்களில் கடும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (ஞா)

## முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தினை எமது மக்...

விடுதலைப் போர், பல்லாயிரம் மக்களின் சாட்சிகளற்ற படுகொலைகளோடு மௌனிக்கப்பட்டு 11 ஆண்டுகள் எந்தவிதமான காத்திரமான அரசியல் தீர்வுகள் இன்றி கடந்து விட்டது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியில் இந்த விடுதலை போராட்டம் மௌனிக்கப்படுவதாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர் தமிழர் தாயகப் பகுதியில் பல இடங்களில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் ஓர் குறுகிய நிலப்பரப்புக்குள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு குண்டுவீச்சுக்களாலும் எறிகணைகளாலும் ஈவிரக்கமின்றி படுகொலை செய்யப்பட்டனர்.

அந்த நாட்களில் ஒருவேளை உணவுக்காக கஞ்சியுடன் உயிரைக் கையில் பிடித்தபடி தமிழ் மக்கள் பட்ட சொல்லொணாத் துன்பம் வார்த்தைகளால் வடிக்க முடியாது. இந்த வகையில் வருடா வருடம் மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலானது தமிழ் மக்களால் பேரெழுச்சியாக உணர்ச்சியுடன் நினைவு கூரப்பட்டு வருகின்றது. இம்முறையும் தமிழ் மக்களாகிய நாம் கொரோனா இடர்கால நிலைமையை கருத்திற் கொண்டு எமது வீடுகளில் இருந்தவாறே இந்த நினைவேந்தலை நாளை 18ஆம் திகதி அனுஷ்டிக்க வேண்டியுள்ளது.

உலக வரலாற்றில் பொறுப்புக் கூறலுக்காக பல இனங்கள் சமூகங்கள் நீண்டகாலம் காத்திருக்க போராட வேண்டியிருந்தமை கண்கூடு. அதே போலவே நாமும் எமக்கான நீதி கிடைக்கும்வரைக்கும் காத்திருக்கவும், கிடைக்கின்ற அனைத்து சந்தர்ப்பங்களையும், வளங்களையும் சிறந்தமுறையில் பயன்படுத்தி மாறுகின்ற பூகோள ஒழுங்கிற்கமைய அகிம்சை வழியில் போராடவும் வேண்டும் என்பதோடு இதை அடையும் வரையும் இனத்திற்கான நியாயம் கிடைக்கும் வரைக்கும் ஓயாது செயற்படவும் இவ்வகையான நினைவேந்தல்கள் அவசியமானவையும் வரலாற்றை ஊடு கடத்துபவையாகவும் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அடுத்த தலை முறையினருக்கும் எமது வரலாற்றை கடத்துவது எதிர்காலத்தில் இவ்வாறான சூழல்களை அவர்கள் எவ்வாறு அணுகவேண்டும் அவற்றை எவ்வாறு கையாண்டு எமது நியாயங்களை நிலைநிறுத்த வேண்டும் என்பதையும் உணர்த்தும்.

அந்த வகையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவினாலும் ஏனையோராலும் வேண்டப்பட்டவாறு அன்றைய தினம் நாம் அனைவரும் ஒற்றுமையாகவும் ஒருமித்த உணர்வோடும் வலி மிகுந்த நாட்களில் தமிழ் மக்கள் பட்ட வலிகளின் அடையாளமாக ஒரு வேளை உணவாக கஞ்சியை குடித்து அந்த மக்கள் அன்றைய நாட்களில் பட்ட துன்பத்தை நினைவு கூர்வதுடன் மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரையான காலப்பகுதியில் சுடரேற்றி நினைவேந்தலினை மேற்கொள்வோம் என தமிழ் மக்கள் பேரவையினராகிய நாம் வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (ஞா)

## நோய் அடையாளம் காட்டாதவர்கள் சமூக...

உள்ளது என்கிறது தொற்று நோய் தடுப்புப்பிரிவு.

தொற்றுநோய் தடுப்புப்பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர இது குறித்து கூறுகையில்,

கோவிட்-19 வைரஸ் தொற்று நோய்ப் பரவல் இலங்கைக்கு பாரிய அளவில் தாக்கங்களை செலுத்தா விட்டாலும் கூட மீண்டும் மீண்டும் தொற்றுநோய் பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளது.

விமான நிலையங்கள் மீள திறக்கப்படும் பட்சமே மீண்டும் எவ்வாறான தாக்கங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி வரும் என்பது தெரிய வரும். சமூகத்தில் நோய் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இப்போது வரையில் கடற்படையினர் மட்டுமே கோவிட்-19 தொற்று நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். அவர்களைத் தவிர்ந்து வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் மட்டுமே நோய் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். பொதுமக்கள் எவரும் நோய் தாக்கத்திற்கு உள்ளாகவில்லை.

ஆகவே இலங்கையில் நோய் தாக்கமானது எவ்வாறான தன்மையில் உள்ளது, எந்த திசையில் பயணிக்கின்றோம் என்பதெல்லாம் இதன் மூலமாக அறிந்துகொள்ள முடிகின்றது. பொதுமக்கள் பாதிக்கப்படவில்லை, சமூகப் பரவல் இல்லை என்பதற்காக நாட்டில் முழுமையாக கோவிட்-19 தொற்றாளர்கள் இல்லை என்ற அர்த்தம் கொள்ள முடியாது.

எங்காவது ஒரு சிலர் எமது பரிசோதனைகளில் இருந்து விடுபட்டு நோய் அறிகுறிகள் காட்டப்படாது சமூகத்தில் நடமாடி வரலாம். ஆகவேதான் சமூக இடைவெளியை தொடர்ந்து கையாள வேண்டும் எனவும், அனாவசிய செயற்பாடுகளையும் தவிர்க்க வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றோம்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தொடர்ந்தும் அச்சுறுத்தல் உள்ளது. இப்போது இவ்விரு மாவட்டங்களும் ஊரடங்கு சட்டத்தின் கீழ் இருக்கின்ற போதிலும் மக்களின் செயற்பாடுகள் வழமையாகவே உள்ளது. எனவே மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும். நாட்டில் மீண்டும் வைரஸ் தொற்று நோய் உருவாக இடமளிக்காத வகையில் மக்களே செயற்பட வேண்டும் என்றார். (ஞா)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

## 90 வீதம் கட்டுக்குள் கொரோனா பரவல்

### சுகாதாரப் பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் 90 வீதம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்தே தொற்றுக்குள்ளானவர்கள் கண்டுபிடிக்கப்படுகின்றனர். வேறெங்கும் கொரோனா தொற்று இல்லை.

கூட்டாக சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் நாட்டில் வைரஸை கட்டுப்படுத்த முடியும். நாங்கள் தற்போது நாட்டை ஓரளவு திறந்து விட்டுள்ளோம். எனினும் கட்டுப்பாடுகள் முழுமையாக எப்போது நீக்கப்படும் என தற்போது தெரிவிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஞா)

# யாழில் நேற்றும் 35 பேருக்கு கொரோனா தொற்று பரிசோதனை

## எவருக்கும் தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் ஆய்வுகூடத்தில் நேற்று சனிக்கிழமை 35 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எனினும் அவர்களில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இரணைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 12 பேர், பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 9 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வந்த 6 பேர், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 6 பேர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட 2 பேர் ஆகியோரே இவ்வாறு பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா-18)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
0768226240

பௌதிகவியல்
T.K.KAJAN B.Sc
077 653 1177 (C-9581)

## கொரோனா COVID - 19

### இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் | சிகிச்சை பெற்று வருபவர்கள் |
|---|---|---|---|
| 957 | 520 | 009 | 428 |

### உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 4,685,889 | 1,794,885 | 310,897 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 4,685,889 | +64,475 | 310,897 | +2,743 |
| ஐ.அமெரிக்கா | 1,495,981 | +11,696 | 89,013 | +506 |
| இத்தாலி | 224,760 | +875 | 31,763 | +153 |
| ஸ்பெய்ன் | 276,505 | +2,138 | 27,563 | +104 |
| ரஷ்யா | 272,043 | +9,200 | 2,537 | +119 |
| ஜேர்மனி | 175,900 | +201 | 8,002 | +1 |
| பிரான்ஸ் | 179,506 | - | 27,625 | +96 |
| ஈரான் | 118,392 | +1,757 | 6,937 | +35 |
| ஐ.இராச்சியம் | 240,161 | +3,450 | 34,466 | +468 |
| இந்தியா | 90,615 | +4,831 | 2,871 | +118 |

இன்று அதிகாலை 12.15 நிலைவரப்படி

### பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்

# பாரிய சவால்களை நாடு எதிர்கொள்ளும்

## ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்பு பொருளாதார ரீதியில் நாடு பல சவால்களை எதிர்கொள்ள நேரிடும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**



(கொழும்பு)

சுகாதாரத் துறையினரின் உத்தரவாதமின்றி பொதுத் தேர்தலையோ, நாட்டின் ஏனைய நடவடிக்கைகளையோ முழுமையாக முன்னெடுக்க முடியாது.

இந்நிலையில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்து முதலீட்டாளர்கள் அச்சப்படும் வகையில் ஜனாதிபதியின் செயலாளர் வெளிப்படையாக அறிவித்தமை தவறாகும் என தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை சமாளித்துக் கொள்ள சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் முன்னாள் அமைச்சர்கள் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பொதுத் தேர்தல் குறித்த கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

இந்த கலந்துரையாடல் கொழும்பு - 7.5 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டில் இடம் பெற்றது. இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து அவர் தெரிவிக்கையில்,

நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. கோவிட் - 19 வைரஸ் அச்சுறுத்தல் குறைந்துள்ளதாக சுகாதாரத் துறை உத்தரவாதம் இன்னும் அளிக்கவில்லை.

ஊரடங்குச் சட்டம் தனிமைப் படுத்தல் சட்டத்தின் கீழ் அமுல்படுத் தப்பட்டுள்ளது. எனவே புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு அல்லாது இந்த பிரச்சினையிலிருந்து மீள இயலாது.

கோவிட் - 19 வைரஸின் பின்னர் புதியதொரு சூழலே உருவாகப் போகிறது. அதற்கு ஏற்றவாறு எமது சட்டதிட்டங்களும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

எதிர்வரும் ஜுன் மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவது என்பது சாத்தியமற்ற விடயமாகும். அதே நிலைப்பாட்டில்தான் ஜனாதிபதியும் உள்ளார் என்றே அறிகிறேன்.

பெரும்பாலும் ஒகஸ்ட் மாதத்தில் தேர்தலை நடத்தக் கூடிய வாய்ப்புகளே அதிகம் உள்ளன. சுகாதாரத் துறை உத்தரவாதம் அளிக்காமல் தேர்தல் ஆணைக் குழுவினால் திகதியை தீர்மானிக்க இயலாது.

எவ்வாறாயினும் அரசாங்கத் திடம் தற்போது நிதிப் பற்றாக்குறை உள்ளது. அரச ஊழியர்களின் விருப்பமின்றி சம்பளத்தின் ஒரு பகுதியை பெற்றுக் கொள்ளவும் முடியாது. ஆனால் நெருக்கடியை சமாளித்துக் கொள்ள அரச ஊழியர்களின் மாதச் சம்பளத்திலிருந்து ஒரு பகுதியை பெற்றுக் கொள்ளவே முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அந்த முயற்சி சாத்தியப்பட்டிருந்தால், மே மாத சம்பளத்தை வழங்குவதில் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டிருக்காது. பாரியதொரு அரசியல் நெருக்கடியில் தான் நாடு உள்ளது.

எதிர்காலத்தில் இந்த நிலைமை மேலும் மோசமடையலாம். நாட்டில் பொருளாதார நெருக்கடி உள்ளதென் பதை ஜனாதிபதியின் செயலாளர் வெளிப்படை யாக அறிவித்தது தவறு. ஏனெனில் முதலீட்டாளர்கள் அச்சமடைந்து பின்வாங்க நேரிடும்.

பங்குச்சந்தை நடவடிக்கைளை தொடர்ந்தும் முன்னெடுத்திருக்க வேண்டும். உரியதொரு திட்டமில்லையென்றால் பொதுத் தேர்தலின் பின்னரான நிலைமை மிகவும் மோசமான தாகவே அமையும். சர்வதேச நாணய நிதியத்திடமும் கடன் பெற கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றது.

இராணுவ அதிகாரிகளை செயலாளர்களாக நியமிப்பது அரச நிர்வாக துறையில் பாரிய நெருக்கடியை தோற்றுவிக்கும். சுகாதார அமைச்சின் செயலாளரில் பிரச்சினை இருந்திருந்தால் அதற்கு பதிலாக மற்றுமொரு சிவில் நிர்வாகத் துறை அதிகாரியை நியமித்திருக்க வேண்டும்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரியின் தகைமை குறித்து எமக்கு சிக்கல் இல்லை.

ஆனால் அவர் இராணுவ அதிகாரியாகவே செயற்படுவார். இது பிரச்சினையைத் தோற்றுவிக்கும் எனத் தெரிவித்தார். (ஞா)

## மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதியில் கிணறுகள் வற்றியதால் சுனாமிப் பீதி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கல்லாறு, குருமண்வெளிப் பிரதேசத்தில் சில கிணறுகளில் நீர் மட்டம் நேற்று முன்தினமிரவு சடுதியாகக் குறைந்தது.

இதனையடுத்து மக்கள் சுனாமி போன்ற அனர்த்தம் இடம்பெறப் போகின்றது என அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறினர்.

இந்தச் செய்தி காட்டுத்தீ போல பரவியதையடுத்து மட்டக்களப்பு கல்லடி அம்பாறை மாவட்ட கரையோரத்திலுள்ள பல பகுதிகளில் இருந்து மக்கள் அச்சத்தினால் வீடுகளை விட்டு வெளியேறினர்.

எனினும், சுனாமி வருவதற்கான எந்த விஞ்ஞான ரீதியான அறிகுறியும் இல்லை என்றும், எனவே மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் அனர்த்த இடர் முகாமைத்துவ மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் ஏ.எஸ்.எம். சியாத் தெரிவித்துள்ளார்.

"தற்போது காலநிலை மாற்றம் காரணமாக கடல் நீர் மட்டம் குறையும்போது கரையிலுள்ள நீர் மட்டங்களை கடல் உள்வாங்கும். அதனால் இது ஒரு சாதாரண நிலை. கிணற்றில் நீர் மட்டம் குறைவது கூடுவது என்பதை நாங்கள் கவனித்திருக்க மாட்டோம். இது இரவில் இடம்பெறும் ஒன்று. இப்போது நாங்கள் ஏதோ ஒரு பிரச்சினை என்றதும் கிணற்றை பார்த்து தண்ணீர் குறைகிறது கூடுகிறது என்று பயப்படத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ஞா)

## கரவெட்டிப் பகுதியில் அலரி மரங்களை அழிக்குக

### பொலிஸாரிடம் கோரிக்கை

(கரவெட்டி)

கரவெட்டி இராஜகிராமம் பகுதியிலுள்ள நச்சுத்தன்மை வாய்ந்த அலரி மரங்களை வெட்டி அழிக்குமாறு கரவெட்டி மரண விசாரணை அதிகாரி நெல்லியடி பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராஜகிராமம் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவர் அலரி விதை உட்கொண்டு மரணமடைந்த சம்பவத்தை அடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மரண விசாரணைகளை மேற்கொண்ட கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் இந்த கோரிக்கையினை பொலிஸாருக்கு விடுத்துள்ளார். (ஞா-60)

## இரத்ததான முகாம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாபெரும் இரத்ததான முகாம் ஊரடங்குச் சட்டம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இரத்ததான முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை-09 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறுமெனவும் ஏற்பாட்டாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ஞா-18)

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம் மற்றும் இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த 12ஆவது மாபெரும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 08 மணி முதல் கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், குறித்த இரத்ததான முகாம் நடைபெறமாட்டாது என்பதை அறியத் தருவதாகவும், உரிய திகதி சில நாட்களில் அறியத் தரப்படுமெனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஞா-18)

உங்கள் விளம்பரங்களை
வலம்புரி இல் பிரசுரிப்பதற்கு
எம்முடன் தொடர்பு கொள்க
076 097 3127
076 636 3378
Valampurii@yahoo.com
குறைந்த கட்டணங்களில் பிரசுரிக்க முடியும்

ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லாவிட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்றதாகி விடும்.
– மாவீரன் நெப்போலியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கைதிகளின் விபரத்தை வெளியிட வேண்டும்

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷவைச் சந்தித்து தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியலை சமர்ப்பித்தனர்.

அதேசமயம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியலை பிரதமரிடம் சமர்ப்பித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் பெயர் விபரம் அடங்கிய பெயர்ப்பட்டியலை யார் கொடுத்தனர் என்பது இங்கு முக்கிய விடயமன்று.

மாறாக தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியலை மேற்குறித்த இரண்டு தரப்பும் பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷவிடம் ஏன் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களிடம் எழுந்துள்ள ஐயம்.

அதாவது தமிழ் அரசியல் கைதிகளின் விபரம் உட்பட அவர்கள் சிறைவாசத்தை அனுபவிக்கும் ஆண்டுகள் என அத்தனை விடயங்களும் அரசாங்கத்திடம் உண்டு.

அதிலும் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் அந்த விபரங்கள் நிச்சயம் பேணப்படும்.

அப்படியானால் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என்று அரசாங்கத்திடம் கேட்பதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும் கடமையாக இருந்திருக்க வேண்டும்.

ஆனால் தமிழ் அரசியல் கைதிகளின் விபரங்கள் அரசாங்கத்துக்குத் தெரியாதது போலவும் தாம் அந்த விபரங்களை வைத்திருப்பது போலவும் மேற்குறித்த சம்பவங்கள் அமைந்துள்ளன.

அரசாங்கத்திடம் இருக்கக்கூடிய தமிழ் அரசியல் கைதிகளின் விபரத்தை இன்னொரு தரப்பு அரசாங்கத்திடம் வழங்குகிறது எனில்,

அந்தத் தகவல்கள் எங்ஙனம் பெறப்பட்டன. அவை முழுமையானவையா என்ற கேள்விகள் எழவே செய்யும்.

அதாவது காணாமல் போனவர்களின் பட்டியலை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதென்பது வேறு. தமிழ் அரசியல் கைதிகளின் பட்டியலை கையளிப்பதென்பது வேறு.

அதாவது காணாமல்போனவர்களின் விபரங்கள் தங்களிடம் இல்லை என்று அரசாங்கம் கூற முடியும்.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் காணாமல் போனவர்களின் விபரங்களை அரசாங்கத்திடம் கையளிப்பது ஏற்புடையது.

மாறாக தமிழ் அரசியல் கைதிகளின் அத்தனை விபரங்களும் அரசாங்கத்தின் கைவசம் இருக்கும்போது, நாங்களாக ஒரு பட்டியலைக் கொடுக்கும்போது அது மிகப்பெரும் சிக்கல்களை ஏற்படுத்தவே செய்யும்.

இதை இன்னும் விளக்குவதாயின், கூட்டமைப்பும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வழங்கிய பட்டியலின் பிரகாரம் தமிழ் அரசியல் கைதிகளை அரசாங்கம் விடுதலை செய்கிறது என எடுகோள் எடுத்துக் கொண்டால்,

வழங்கப்பட்ட பட்டியலில் தமிழ் அரசியல் கைதிகள் சிலரின் பெயர் விபரம் தவறவிடப்பட்டிருக்குமாயின் அவர்களின் விடுதலை சாத்தியமற்றுப் போகும்.

இவ்வாறான நிலைமை எத்தகைய தாக்கத்தை உருவாக்கும் என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

எனவே இரு தரப்பும் அரசாங்கத்திடம் சமர்ப்பித்த தமிழ் அரசியல் கைதிகளின் விபரப் பட்டியலை ஊடகங்களில் வெளிப்படுத்த வேண்டும்.

இதைச் செய்வதன் மூலம் அவற்றை அவர்களின் உறவுகள் செம்மை பார்க்க உதவும்.

## எதிர்காலத்தில் மேலும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்படுவார்கள்

### சஜித் தரப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவை கைது செய்தமை அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை என்றும் எதிர்காலத்தில் மேலும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியது.

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டதையடுத்து, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் கூட்டு செய்தியாளர் சந்திப்பை நடத்திய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா, ரவூப் ஹக்கீம் மற்றும் றிசாத் பதியுதீன் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த சம்பிக்க ரணவக்க, "முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து 2014 இல் அரசாங்கத்தை விட்டு வெளியேறிய அமைச்சர்களில் ராஜித சேனாரட்னவும்ஒருவர்.

ராஜித 2014 இல் எடுத்த அரசியல் முடிவின் விளைவாக உயர் பதவிகளுக்குச் சென்ற சிலர் தற்போதைய அரசாங்கத்தின் கூட்டாளிகளாக மாறியிருப்பது எங்களுக்கு வருத்தமளிக்கிறது" எனத் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்காலத்தில் கைது செய்யப்படவிருக்கும் எதிர்க்கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் இருப்பதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். மேலும் நாங்கள் சிறைகளுக்குப் பழகிவிட்டதால் எதற்கும் பயப்படப் போவதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ராஜித சேனாரட்னவின் கைது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை எனக் குறிப்பிட்ட சஜித் பிரேமதாஸ, ரவூப் ஹக்கீம் மற்றும் றிசாத் பதியுதீன் ஆகியோரும் ஜனநாயக வழிமுறைகள் மூலம் இந்தப் பழிவாங்கலுக்கு எதிராக நாங்கள் தொடர்ந்து போராடுவோம் என்றும் தெரிவித்தனர். (இ-7-8)

## பாராளுமன்றைக் கூட்டும் எதிர்த் தரப்பினரின் கூட்டுச்சதி அம்பலம்

### செஹான் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிட இரகசிய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களை செல்லுபடியற்றதாக்கவே கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தைக் கூட்ட அழுத்தம் கொடுக்கின்றார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

பொதுத்தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனு செல்லுபடியற்றது என்று எதிர்த் தரப்பினர் குறிப்பிடுகின்றார்கள். அத்துடன் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை சவாலுக்குட்படுத்தி நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஐக்கிய மக்கள் சக்தியினரும் பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிட தற்போது இரகசியப் பேச்சுவார்த்தைகளை இரு தரப்பினரும் முன்னெடுக்கின்றார்கள். இதன் காரணமாகவே தேர்தல்கள் ஆணைக்குழுவினர் அங்கீகரித்த வேட்பு மனுக்களை கேள்விக்குட்படுத்துகின்றார்கள்.

ஏற்றுக்கொண்ட வேட்பு மனுவை இரத்துச் செய்யும் அதிகாரம்தேர்தல்கள்ஆணைக்குழுவுக்குக் கிடையாது. பாராளுமன்றத்துக்கு மாத்திரமே அந்த அதிகாரம் உண்டு.

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கே பெரும்பாலான ஆதரவு உண்டு. கலைக்கப்பட்ட பாராளுமன்றம் கூட்டப்பட்டால் நிச்சயம் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுவை ஐக்கிய தேசியக் கட்சியினர் இரத்துச் செய்வார்கள்.

இதன் பிறகு பொதுத் தேர்தலுக்கு மீண்டும் வேட்பு மனுத் தாக்கல் செய்ய வேண்டும். அப்போது இரு தரப்பினரும் இணைந்து வேட்புமனுத் தாக்கல் செய்யவே பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு தொடர்ந்து அழுத்தம் பிரயோகிக்கின்றார்கள்.

பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஒன்றிணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டாலும் மக்களாணையை இனியொரு போதும் பெற முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் இடம்பெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலுடன் புறக்கணித்து விட்டார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

## விடுதியில் மோதல்; இருவர் பலி

(கொழும்பு)

களுத்துறை, ஹொரண தங்குமிட விடுதியில் சிலரிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக இருவர் உயிரிழந்தனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்றது. இச்சம்பவத்தின் போது காயமடைந்த ஒருவர் ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். குறிப்பிட்ட சம்பவத்தின் போது உயிரிழந்தவர்கள் கெப்பிற்றிக்கொல்லாவ பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது விசாரணைகளின் போது தெரிய வந்தது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-8)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக்கடைச் சந்திவரை, மணிக்கூட்டு வீதி, கஸ்தூரியார் வீதியில் ஒரு பகுதி, ராஜா திரையரங்கு, வெலிங்டன் சந்தி, பெரியகடை வீதி, பழைய தபாற்கந்தோர் வீதி, ஸ்ரான்லி வீதி, பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி, மொபிற்றல் பிறைவேட் லிமிடெட் ஸ்ரான்லி வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ், சிறி நதியா நகை மாளிகை, Raja Talkies, றொப்பாஸ், அன்னைநாகா பூட்சிற்றி, சிவராதா, ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், LOLC ஆகிய பிரதேசங்களிலும்

நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** அராலிப் பிரதேசம், செட்டியார் மடச் சந்தி, கரம்பிட்டி பிள்ளையார்ஆலயம், அராலி ஐயனார் கோவிலடி, அராலி கொலனி, அராலி சரஸ்வதி பாடசாலைஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** துட்டுவாகை, கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** வட்டுப்பித்தன்மடு, புதுக்காமம், காலை 10 மணியிலிருந்து 2மணிவரை உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீஸ்வரம் வரை, வங்காலைப் பிரதேசம், சீனத்துறை முகம், தரவன் கோட்டைப் பிரதேசம், சாந்திபுரம் புகையிரத நிலையப் பிரதேசம், கடலேரி, South Bar இராணுவ முகாம், தள்ளாடி இராணுவமுகாம், தள்ளாடி டயலொக் தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

எதையும் வெறுக்காதே, எதற்கும் அஞ்சாதே, யாரையும் ஒதுக்காதே, உன் பணியைச் செய். -அரவிந்தர்

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ கடவுள் நமக்குக் கதிரவனும் கேடயமுமாய் இருக்கிறார். கடவுள் அருளையும் மேன்மையையும் அளிப்பார்.

❖ கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.

❖ மன ஒற்றுமை கொண்டிருங்கள் அமைதியுடன் வாழுங்கள் அப்போது அன்பும் அமைதியும் அளிக்கும் கடவுள் உங்களோடு இருப்பார்.

❖ அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும், அனைத்தையும் நம்பும், அனைத்தையும் எதிர்நோக்கி இருக்கும், அனைத்திலும் மன உறுதியாய் இருக்கும்.

❖ கடவுளே! என் இளமை முதல் எனக்குக் கற்பித்து வந்தீர் இனி வரும் நாள்களிலும் உம் வியத்தகு செயல்களை அறிவிப்பேன்.

❖ ஒருவர் தம்மைத் தூய்மையாக வைத்துக் கொண்டால், அவர் எந்த நற்செயலையும் செய்ய ஆயத்தமாயிருப்பார்.

❖ மனத்தளர்ச்சியுள்ளவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள் வலுவற்றோருக்கு உதவுங்கள் அனைவரிடமும் பொறுமையாயிருங்கள்.

❖ நம்பிக்கை இல்லாத தீய உள்ளம் உங்கள் எவருக்கும் வராதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

# உயர் கல்வித் துறையை மறுசீரமையுங்கள்

## பல்கலை.அதிகாரிகளிடம் ஜனாதிபதி வேண்டுகோள்



(கொழும்பு)

பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்து சமூகத்திற்குள் பிரவேசிக்கும் பட்டதாரிகளுக்கு இலகுவாகத் தொழில்களைத் தேடிக்கொள்வதற்கு உதவும் வகையில் உயர் கல்வி முறைமையைத் தயாரிக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்வி பற்றி எத்தகைய வியாக்கியானங்கள் இருந்த போதும் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் இளைஞர், யுவதிகளுக்கு தொழிலொன்றைத் தேடிக்கொள்ள முடியாதாயின் அது சரியான கல்வி முறையாக இருக்க முடியாது. பட்டதாரிகள் தொழில் கேட்டு ஊர்வலம் செல்வதற்குப் பதிலாக தொழில்கள் அவர்களைத் தேடி வரும் கல்வி முறைமையே தேவையாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உள்ளிட்ட பல்கலைக்கழக உபவேந்தர்களுடன் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் சுகாதார அதிகாரிகளின் பரிந்துரையின் பேரிலேயே மீண்டும் திறக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தற்போது அறிமுகப்படுத்தப்பட்ட தொலைக் கல்வி முறைமையை மேலும் மேம்படுத்துவதற்கு இதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தில் 30 வீதத்தினரையாவது நேரலை அதாவது இணைய வழிக் கல்விக்கு உட்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வெளிநாடுகளில் கல்வி கற்று வந்த ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்களை கொவிட் நோய்த்தொற்று பரவலுடன் நாட்டுக்கு அழைத்து வர வேண்டியிருந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இவ்வளவு அதிகமான மாணவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வது நல்ல அறிகுறியல்ல என்றும் தெரிவித்தார். "இவர்களது கல்விக்காக அதிகளவு அந்நியச் செலாவணி வெளிநாடுகளுக்குச் செல்கின்றது.

பிள்ளைகள் தம்மை விட்டும் தூரமாகியிருப்பது பெற்றோருக்கு அழுத்தத்தைத் தருவதாக உள்ளது. இந்த நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால் பல்கலைக்கழக கல்வி பல்வகைப்படுத்தப்பட வேண்டும். தொடர்பாடல் தொழில்நுட்பம் உள்ளிட்ட புதிய தொழில்நுட்ப அறிவு, தாதி சுற்றுலா, ஆசிரியர் தொழில் போன்ற துறைகளில் பட்டப் பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்" என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பல்கலைக்கழக மாணவர்களை இலக்காகக் கொண்டு குறைந்த செலவில் புதிய கணனிப் பாகங்களை ஒன்றிணைக்கும் இயலுமை குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளுக்குச் சுட்டிக் காட்டினார்.

பல்கலைக்கழக பொறியியல் பீடம் உள்ளிட்ட இதுபோன்ற பாட அறிவுடன் கூடியவர்களுக்கு இதற்கு உதவ முடியும். எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்திற்கு பிரவேசிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் கணனியொன்றை பெற்றுக்கொள்ளும் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

உயர்தர பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழகத்திற்கு நுழையும் தகைமை பெறும் அனைவருக்கும் பல்கலைக்கழகங்களுக்கு நுழைய முன்னர் வீடுகளிலிருந்து ஆங்கிலம் மற்றும் கணனிக் கல்வியை வழங்க திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்கப்பெறும் மாணவர்கள் எண்ணிக்கை தொடர்பில் ஜனாதிபதி வினவியதற்கு பதிலளித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இம்முறை மாணவர் அனுமதி 7500 பேரினால் அதிகரிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க ஆகியோர் உட்பட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக் கழக உபவேந்தர்கள் இச் சந்திப்பில்கலந்து கொணடனர்.(இ-7)


ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

அமரர்.திரு. வேலுப்பிள்ளை நாகலிங்கம்



அன்னை மடியில் 07.04.1918

இறைவன் அடியில் 17.04.2020

17.04.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 18.05.2020 அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் பங்குகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவிற்கு அஞ்சலி செலுத்திய, அனுதாபம் தெரிவித்த ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைத்து உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(2813)

"குமரகோட்டம்"
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

இங்ஙனம்
Dr.அ.ஜெயகுமரன் குடும்பத்தினர்



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


# இராசிபலன்

17.05.2020
வைகாசி 04, ஞாயிற்றுக்கிழமை
தசமி பிற்பகல் 3.12 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 4.19 மணிவரை
சுபநேரம் 8.53-10.23 மணிவரை
இராகுகாலம் 4.23-5.53 மணிவரை
சந்திராஷ்டமம்:- ஆயில்யம், மகம்
சித்தாமிர்தம்

வளவன்

**மேஷம்** — சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**ரிஷபம்** — மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும் பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** — கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வெறுத்தவர்கள் மனம் மாறுவர்.

**சிம்மம்** — உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்வது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி** — உறவினர்களின் சந்திப்புகள் மகிழ்ச்சி தரும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்துசேரலாம்.

**துலாம்** — நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபாரத்தை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.

**விருச்சிகம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், மகிழ்ச்சிகூடும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**தனுசு** — மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மகரம்** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், இல்லத்தில் இன்பங்கள் கூடும் நாள், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மீனம்** — குடும்பத்தினரிடம் முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, புதியவர்களின் நட்பு கிடைக்கும், திட்டமிட்ட காரியமொன்றில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம்.

துன்பப்படாமலும் அவமானப்படாமலும் எவரும் கற்க முடியாது.



# அத்தியாவசிய சேவை துண்டுக்குறிப்புடன் 271 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளைக் கடத்திய கும்பல்

## வெளியான பல திடுக்கிடும் தகவல்கள்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவை எனும் துண்டுக் குறிப்புடன் நாட்டின் பல பகுதிகளுக்கும் கடத்திச் செல்லும் நோக்கில், 5, 10 கிலோ அரிசி உறைகளில் சூட்சுமமாக மறைத்து தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுமார் 271 கோடி ரூபாய் பெறுமதியான 225 கிலோ 969 கிராம் நிறை கொண்ட ஹெரோயின் போதைப் பொருளை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைப்பற்றினர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ மெதவத்தவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கு அமைய, நேற்று முன்தினம் நள்ளிரவில் நுககஹவத்த வீதி, வெலிசறை, ராகமை எனும் முகவரியிலுள்ள கட்டடம் ஒன்றை சுற்றிவளைத்த போது இந்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும், இதன்போது நான்கு சந்தேக நபர்களையும் கைது செய்ததாகவும், பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன கூறினார். 24,30,50 மற்றும் 55 வயதுகளை உடையவெலிசறை,ஹேமாகம பகுதிகளைச் சேர்ந்த நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் இந்த நான்கு சந்தேக நபர்களும், நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு 7 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி பெறப்பட்டது.

அதன்படி குறித்த சந்தேக நபர்களிடம் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ மெதவத்த, பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஞ்சுள சேனாரட்ன ஆகியோரின் நேரடிக் கட்டுப்பாடு மற்றும் ஆலோசனைகளுக்கு அமைய உதவி பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் கீழான சிறப்புக் குழுவினரால் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் படி, போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல்வேறு திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பில் சிறையில் உள்ள கொஸ்கொடதாரக எனும் திட்டமிட்ட குற்றச் செயல் கும்பலின் தலைவனே சிறையிலிருந்து இந்தக் கடத்தலை நெறிப்படுத்தியமை தெரியவந்தது.

அதன்படி, இந்தக் கடத்தலின் பின்னணியில் உள்ளோர், பண முதலீடு செய்தோர் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்ய விசேட விசாரணைகள் இடம் பெறுவதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரட்ன கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ மெதவத்த தகவல் தருகையில்.

"உண்மையில் தற்போது விமான நிலையங்கள், துறைமுகங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் அவற்றின் ஊடாக போதைப் பொருள் நாட்டுக்குள் வரவாய்ப்பில்லை. எனினும் தென்கடல் பரப்பூடாக நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டுவரப்பட்டு நாடு முழுவதும் கடத்தப்படுகின்றமை விசாரணைகளில் தெரியவந்தது.

அதன் பிரகாரம் ஈரான், ஆப்கானிஸ்தான் , பாகிஸ்தான் எல்லைகளில் இருந்து கடல் மார்க்கமாக கடத்தி வரப்பட்ட ஹெரோயினே இவ்வாறு நாம் தற்போது கைப்பற்றப்பட்ட பொதிகளில் உள்ளவை என நாம் நம்புகின்றோம். இதற்கான சான்றுகள் உள்ளன.

அவ்வாறு கொண்டுவரப்பட்ட ஹெரோயின், அழகாக ஊதா நிறத்தை ஒத்த பானவகை குறித்த பக்கெட்டுக்களில் அடைக்கப் பட்டுள்ளன. ஒரு பக்கெட்டில் சுமார் ஒரு கிலோ 137 கிராம் வரை உள்ளன. அவ்வாறு அடைக்கப்பட்ட 200 பக்கெட்டுக்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்ட போதைப்பொருள் தொகையில் உள்ளன.

பின்னர் அந்த போதைப் பொருள் பக்கெட்டுக்களை மிக சூட்சுமமாக, 5.10 கிலோ அரிசி உறைகளில் மறைத்துள்ளனர்.

அதன் பின்னர் அந்த அரிசியில் மறைக்கப்பட்ட ஹெரோயினை பொதி செய்து, அத்தியாவசிய சேவைகள் எனும் துண்டுக் குறிப்புடன் நாடளாவிய ரீதியில் பல பகுதிகளுக்கு கடத்திச் செல்ல திட்டமிடப்பட்டது.

நாட்டில் கொரோனா நிலைமை காரணமாக ஊரடங்கு நிலைமை கடந்த காலத்தில் இருந்ததால் பல துறைகளின் செயற்பாடுகளுக்கு கட்டுப்பாடுகள் இருந்தன.

எனினும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அவர்களது நடவடிக்கைகளை அதன் போதும் எந்த சிக்கலும் இன்றி முன்னெடுத்துச் சென்றுள்ளமை இந்த கைதுகள் ஊடாக தெரிய வந்தது.

நாம் சற்று தாமதமாக அந்த இடத்திற்கு சென்றிருந்தால் கூட அத்தியாவசிய சேவைகள் என்ற துண்டுக் குறிப்புடன் அங்கிருந்து ஹெரோயின் கடத்தப்பட்டிருக்கும் என்றார்.

குறித்த கட்டடத்திலிருந்து, நாட்டின் பல பகுதிகளுக்கு இந்தத் ஹெரோயின் தொகையை கடத்திச் செல்ல, சொகுசு காரும், கப் வண்டியும் தயார் நிலையில் இருந்த நிலையில் அவையும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் தமது பொறுப்பில் எடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அரிசி உறையிலும் போதைப்பொருள் பக்கெட் சூட்சுமமாக மறைக்கப்பட்ட பின்னரும் அரிசி உறையின் நிறை, வடிவம் உள்ளிட்ட எவையும் மாறா வண்ணமும், எவருக்கும் சந்தேகம் ஏற்படா வண்ணமும் மீள அவ்வுறைகள் தைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் கூறினர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட இந்த ஹெரோயின் தொகையே இலங்கை நிலப்பரப்பில் மீட்கப்பட்ட 2 ஆவது அதிகூடிய ஹெரோயின் தொகையாகும் என பொலிஸார் மேலும் கூறினர். இந்நிலையில் மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன. (இ-7-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2038

### தனுஶ்ரீ




### கார்த்திக்




### வானஸ்வி




### மலர்விழி




### லிங்கேஷ்




### உமாவதனி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## சடக்கெனத்தட்ட சொடக்கென விழும் திரையில்

# அகிலத்தின் அசைவுகளை அறிய துணைபுரியும் தொலைத் தொடர்பு



ம.பிரான்சிஸ்க்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்-
தொடர்பாடல்-
ஊடகவியற் கற்கை,
ஆசிரியர்-
யா-மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

சர்வதேச தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் இன்றாகும். சர்வதேச தொலைத் தொடர்பு சங்கம் (சதொச) **International Telecommunication Union (ITU)** 1865 இல் உருவானது. இது நிறுவப்பட்டதை நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் மே 17 ஆம் திகதி சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் உறுப்பினர்கள் இந்தத் தினத்தை கொண்டாடுகின்றார்கள்.

இத்தினமானது மனிதனுக்கு தொலைத்தொடர்பு ஆற்றிவரும் சேவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றது. சர்வதேச தொலைத்தொடர்பு தினத்தின் முக்கிய எதிர்பார்க்கை தொலைத் தொடர்பு நாட்டின் அபிவிருத்திற்கும் மனிதாபிமான வளர்ச்சிக்கும் எவ்வாறு உதவி வருகிறது என எடுத்துக் காட்டுவதாகும்.

மக்கள் குழுக்களாக -சமூகமாக வாழத்தொடங்கும் பொழுது ஒருவருக்கு ஒருவர் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள-ஒரு பந்தத்தினை ஏற்படுத்த தகவல் தொடர்பு அவசியமாயிற்று. மொழிகளோ எழுத்து வடிவமோ இல்லாத காலத்தில் உடலசைவுகள், சீட்டிகையொலி, புகை எழுப்பல், வர்ணம் தீட்டுதல் போன்றவற்றை குழுவிற்கேற்ப சமிக்ஞை மொழியில் தகவல்களை பரிமாறிக்கொண்டனர். மன்னர்கள் முதல் மங்குனி வரை அன்றைய உலகின் மிகப்பெரிய சவால் தொலைத்தொடர்பு ஆகும்.

சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட முகவர் நிலையமாக தமது சேவையை முன்னெடுத்து வருகின்றது. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை நோக்கிய பயணத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் தரநிர்ணயங்களை எட்டுவதற்கான வழிமுறைகள், அதற்காக நடைமுறைப்படுத்தக் கூடிய வழிமுறைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதன் மூலம் ஏற்றத்தாழ்வுகளை குறைப்பது இதன் முதன்மை நோக்கமாகும்.

உலகில் மிகவேகமாக வளர்ந்துவரும் துறைகளில் தொலைத் தொடர்புத்துறையும் ஒன்று. ஆரம்ப காலத்தில் மனிதன் தன் செய்தியை தொலைதூரத்தில் உள்ளோருக்குப் பரிமாறி புறாக்களைப் பயன்படுத்தினான் என்கிறது வரலாறு. புகைவழி செய்தியனுப்பி குறியீடு வழியாகத் தொடர்பாடல் கொண்டு, ஊருக்கு ஊர் பறை முழக்கம் அடித்து அறிவித்தல்கள் கொடுத்த காலங்கள் மாறி இன்று அகிலவுலகுடனும் நொடிப்பொழுதில் சடக்கொன தொடர்பு கொள்ளவைக்கும் புதிய ஊடகங்களான: மின்னஞ்சல், குறுஞ்செய்திப் பரிமாற்றம், சடக்கெனத் தட்டசொடக்கொன தகவலைப் பரிமாற்றும் சமூக ஊடக செயலிகளின் தகவல் பரிமாற்றம், கூகுள் போன்ற செயலிகளின் தகவல் பரிமாற்றம் வரை தகவல் தொடர்புத்துறை வளர்ச்சி அடைந்து கொண்டே போவது வியக்க வைக்கின்றது.



சர்வதேச தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சமூக தினம் இன்றாகும். இதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

தொடர்பாடலின் வரலாற்றைப் பின்னோக்கி பார்க்குமிடத்து நவீன தகவல் தொடர்பாடலின் வரலாறு 1450 இல் ஜேர்மனியைச் சேர்ந்த ஜோஹான்னஸ் குட்டன்பேர்க்த் என்பவர் அச்சு இயந்திரத்தை கண்டு பிடித்தது நவீன அச்சிடல் நுட்பமுறையை ஆக்கியமை வரை பின்னோக்கி செல்கின்றது எனக் குறிப்பிட்டாலும் யாரும் மறுப்பதற்கில்லை. அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்த ஜோஹான்னஸ் குட்டன்பேர்க்த் தனது வாழ்நாளில் கண்டுபிடிப்புக்கான பாராட்டைப் பெறாமலேயே இறந்துபோனார் என்பது பலரும் அறிந்திராத வேறுகதை. அச்சிடல் தொடர்பாடலுக்கு ஆணிவேராக அமைந்தது இவரது செயற்பாடுகளே.

### செமாபோர் லைன்கள்

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 17 ஆம் நூற்றாண்டில் கண்டுபிடித்த செமாபோர் லைன்கள் **(semaphore lines)** கருவிகளுடனான செயற்பாடு தொலைத் தொடர்பின் ஆரம்பம் என்று கூட கூறலாம். ஒரே நேர்கோட்டில் உயரமான கோபுரங்கள் அமைத்து அதன் கண்காணிப்பு கண்ணாடியுடன் (ராடர்கள்) அமைக்கப்பட்டிருக்கும். செமாபோரின் இயந்திரக்கைகள் அசைவுகளை வைத்து எழுத்துக்கள் கிரகிக்கப்பட்டு வாக்கியங்களாக படித்து அறிந்துகொண்டனர். பிரெஞ்சு புரட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தநேரம்.

ஆறு நாடுகள் பிரான்ஸ் நாட்டைச் சுற்றி வளைத்து கொண்டது. செமாபோர் லைன்களை சுமார் 3000 மைல்களுக்கு நிறுவியதால் உள்நாட்டு விரைவான தகவல் தொடர்பிற்கு அவை பெரிதும் உதவியது. மேற்கு யூரோப்பை மாவீரன் நெப்போலியன் கைப்பற்ற அதன் செமாபோர் லைன்கள் மேல் இருந்த ஆசையே காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

### அலெக்ஸ்சாண்டர் கிரகம் பெல்லின் சாதனை

இதனைத் தொடர்ந்து 19 ஆம் நூற்றாண்டின் ஆய்வாளர்களின் குறிப்பாக சாமுவேல் எப்.பி. மோரிஸ். அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல், குக்லியெல்மோ மார்க்கோணி ஆகியோரின் உன்னத செயற்பாடுகள் தொலைத் தொடர்பின் அடுத்தபடியான திருப்புமுனையாக அமைகின்றன. கம்பி வழியாக மின் சமிக்ஞை அனுப்புகின்ற மின்சார வழி தந்தி தொடர்பு முறையை 1838 ஆம் ஆண்டு சாமுவேல் மோர்ஸ் என்பவர் தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து உருவாக்கினார். கம்பி வழியாக ஒலியை அனுப்புகின்ற தொலைபேசி முறையை கிரகம்பெல்லும் கம்பி இல்லாமல் மின் சமிக்ஞைகளைஅனுப்பும் தொலைஒலி கடத்தி முறையை மார்க்கோணியும் அறிமுகப்படுத்தி முதன்மை பெறுகின்றனர். இங்கு கிரகம்பெல்லினால் ஆரம்பித்து வைக்கப்படும் தொலைபேசி புத்தாக்க கண்டுபிடிப்புடன் தொலைத் தொடர்பு புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. கம்பி வழியாக தந்தி முறையை மேம்படுத்த கிரகம்பெல் எடுத்த முயற்சிகளின் உழைப்பே தொலைபேசி ஆகும்.

அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் தனது ஆராய்ச்சிப் பணிக்கு தோமஸ் வாட்சன் என்ற துணை ஆராய்ச்சியாளரை பணிக்கு அமர்த்தினார். இருவரும் பணிகளில் ஈடுபடும் போது தொலைபேசியை உருவாக்கினர். அலெக்ஸ்சாண்டர் கிரகம்பெல் தொலைபேசி கண்டுபிடிப்பான காப்பீட்டு உரிமத்தை 1876 இல் பெற்றார். கிரகம்பெல் மார்ச் 10, 1876 அன்று தொலைபேசியில் பேசிய முதல் வார்த்தைகள்: **Mr.Watson, Come here, I want to See You)** என்று கூறுகின்றார்கள். அவரது உதவிப்பணியாளராக இருந்த தோமஸ்வாட்சன் தொலைபேசியை வடிவமைத்திருந்தாலும் மின்சாரம் மூலம் ஒலியை எடுத்துச் செல்வது கிரகம்பெல்லின் மூளையில் முளைத்த முன்யோசனையாகும். ஒரேநேரத்தில் இரு சமிக்ஞைகள் வயர் மூலம் தந்தி அனுப்ப 1875 ஆம் ஆண்டில் ஏப்ரல் 6 ஆம் திகதி அரசாங்கம் அனுமதித்ததாக அறிய முடிகின்றது. கிரகம்பெல் இம்முறையை மேம்படுத்தி 1876 மார்ச் 7 ஆம் திகதி ஒலியை வயர் மூலம் தந்தியாக பரிமாறச் செய்து காட்டினார்.

அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட நவீன தொலைத்தொடர்பின் மூலங்கள், கம்பியில்லாத் தந்தி கண்டுபிடிக்கப்பட்டதும் தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சியடையத் தொடங்கியதைக் காணலாம். இத்துறையில் வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, மோர்ட்டலோ, கையடக்கத் தொலைபேசி, டெலக்ஸ், பக்ஸ், மின்னஞ்சல், இணையம், திறன் தொலைபேசிகள் (சூட்டிகைத்தொலைபேசி), செய்மதித் தொடர்புகள் என விரிந்து செல்லும் கண்டுபிடிப்புக்கள் தொலைத் தொடர்புத்துறையில் மனிதன் புத்தாக்க கண்டுபிடிப்புக்களின் சாதனைச் சரித்திரங்களாகும்.

### தகவல் தொடர்புப் பணிகள்

மனிதனின் தகவல் தொடர்புகள்: தனித்திருப்பவர்களிடையே இடைத்தொடர்புகளை ஏற்படுத்தல், செய்மதிப் பரிமாற்றம் செய்தல், கல்வியூட்டல், கருத்துப் பரிமாற்றம், அறிவித்தல் அறிவுறுத்தல், பொருள்கோடல் செய்தல், பொழுதுபோக்கு காட்டல், கலை வெளிப்பாடு, வர்த்தகம், கண்காணிப்பை மேற்கொள்ளல் முன்னெச்சரிக்கையான பல தேவைகளுக்கு எனத் தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் பயன்பட்டு வருகின்றது. இயற்கை அனர்த்தங்களின் போது, போர் மூட்டம், பாதுகாப்பு, தொற்றுநோய் கொரோனா போன்றனவற்றின் போது அறிவுறுத்தல்களை வழங்கி பொதுமக்களை முதற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கத் துணைபுரிகின்றது. கொரோனாவின் தாக்கத்தால் உருவான ஊரடங்கு வேளையில் வறிய மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளைச் செய்வதற்குக் கூட இன்று தூக்கிச்செல்லும் தொலைபேசி மூலம் தூரதேசத்திலிருந்தும் கூட துரிதமாக மேற்கொள்ள முடிகின்றது.

கணனிகள் - இணையம் தொலைத்தொடர்பில் பெரும் பங்கினை வழங்குகின்றன. செய்மதி மூலம் வழங்கப்படும் இணைய சேவையில்: தொடர்பு சேவைகள், தகவல் சேவைகள் ஆகிய இருவகைச் சேவைகள் மையப்படுத்தப்பட்டுள்ளன என்கிறார்கள். மின்னியல் தபால், மின்னியல் சஞ்சிகை, மின்னியல் வெளியீடு, ரெல்நெட், தொடர் கலந்துரையாடல், உலகின் பரந்த வலை **(www.)** போன்ற பல வகையான செயலிகளின் பரிமாணங்கள் நாளுக்குநாள் நமக்கு கிடைத்துக்கொண்டே போகின்றது.

மேற்குலக நாடுகளில் செய்மதிகளின் மூலம் தகவல் பரிவர்த்தனையை மனிதனால் நேரடியாகவும் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவுள்ளது. "நெவிகேடர்" மேற்கத்தேய நாடுகளில் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள பாதை வழிகாட்டியாகும். நெவிகேடரில் நாங்கள் செல்லவேண்டிய இடத்தின் முகவரியை நிரப்பினால் செய்மதியின் துணைகொண்டும் நெவிகேடர் குரல் சமிக்ஞையாக எமக்கு வழியைக் காட்டிக் கொண்டே செல்லும். இன்று சூட்டிகைத்தொலைபேசியிலும் இச் சேவையை நாம் பெற முடிவது குறிப்பிடத்தக்கது.

விரல் நுனியால் சடக்கென தட்ட சொடக்கொன விழும் திரையில் அகிலத்தின் அசைவுகளை இருந்த இடத்தில் இருந்தே அறிந்துகொள்ளும் அளவு தகவல் மற்றும் தொலைத்தொடர்பு வளர்ந்துள்ளது வியப்பே. தொலைக் காட்சியின் றிமோட் கொண்ரோலாக இன்று கைத்தொலைபேசி பயன்படுத்தப்படுமளவிற்கு சில நாடுகளில் தொலைத் தொடர்பு வளர்ந்துகொண்டிருக்கின்றது. 'எதற்கு எடுத்தாலும் கூகுளில் பார் என்னும் தொடர்பாடல் முறைகள் இன்று எம்மத்தியில் வந்துவிட்டது: "அதன் அர்த்தத்தை கூகுளில் கண்டுபிடி", "கூகுள் லைட்டைபோடு", "கூகுள் நெவிகேடரைப்பார்த்து நட", "இன்றைய பருவநிலை என்ன", "இன்றைய எனது பணிகளுக்கான அட்டவணையைப் படி" என்று எமது நாளாந்த நிகழ்ச்சி நிரல் நீள்கின்றது. இப்படி ஊடகம் வழியாக பெறுநர்களின் வாழ்க்கையில் பல துறைகள் மீதும் பதிப்பு நிகழ்த்தப்படுவது பரகசியமான விடயமாகும்: பெறுநரின் நடத்தை மாற்றப்படுகின்றது. ஊடகத்தால் தனிநபர்களின் நாளாந்த நிகழ்ச்சி நிரல்கள் தீர்மானிக்கப்படுகின்றன, பெறுநரின் எண்ணங்கள், மனப்பாங்குகள் ஊடகத்தாலேயே வழி நடத்தப்படுகின்றன.

இதற்கு இன்று வழியமைந்தது தொலைத் தொடர்பின் அதீத வளர்ச்சியே என்றால் யாரும் மறுக்கமாட்டார்கள். இணையத்தள ஜாம்பவானான கூகுள் தகவல் தொடர்புத்துறையை புதிய பரிமாணத்துக்கு எடுத்து சென்று கொண்டு இருக்கின்றது.

தொலைத்தொடர்பு, மனிதனுக்கு இன்று இன்றியமையாத ஒன்றாக நவீன இலத்திரனியல் யுகத்தில் மாறிவிட்டது. இந்த தொலைத் தொடர்பு தினத்தில் தொலைத் தொடர்பின் நன்மை, தீமைகள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது நல்லது. தொலைத்தொடர்புக்கும் மக்களின் அபிவிருத்திற்கும் இடையேயுள்ள தொடர்புகளை இனங்காட்டுவதும் முக்கியம். தொலைத்தொடர்பின் அபிவிருத்தியானது நவீன காலத்தில் மனிதனின் அழிவுகளுக்குக்கூட பயன்படுத்தப்பட்டு வருகின்றது. நவீன தொலைத்தொடர்பில் செய்மதியின் பங்களிப்பு உலகளாவிய நாடுகளை வேவுபார்ப்பதற்கும் நாட்டு இரகசியங்களை அறிவதற்கும் குறிப்பிட்ட வல்லரசுகளின் ஆதிக்கத்தை பேணிக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படுவது கண்கூடு.

இவை பாரிய பிரச்சினைகளை எதிர்காலத்தில் எமதுலகில் ஏற்படுத்திவிடும் என எதிர்பார்கின்றார்கள். எது எவ்வாறாயினும் பின் நவீனத்துவ யுகத்தில் வாழும் மனிதனுக்கு இன்றியமையாத ஒன்றாக தொலைத் தொடர்பு மாறிவிட்டதைக் கருத்திற் கொண்டு விழித்துக் கொள்வோம்.

# கொவிட்-19 சுகாதார,சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஒரு பில்லியன் ரூபாவைத் தாண்டியது



(கொழும்பு)

கொவிட்-19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்திற்கு ஸ்ரீலங்கா டெலிகொம் பி.எல்.சி. மற்றும் மொபிடெல் நிறுவனம் 50 மில்லியன் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

அதற்கான காசோலைகள் ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் தலைவர் ரொஹான் பெர்னாண்டோவால் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

மொபிடெல் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி நளின் பெரேரா உள்ளிட்ட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இதன் போது பிரசன்னமாகியிருந்தனர்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை 50 மில்லியன் ரூபாவை அன்பளிப்புச் செய்தது. அதற்கான காசோலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உள்ளிட்ட தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் முக்கியஸ்தர்கள் இதன் போது சமுகமளித்திருந்தனர்.

Naturub Industries தனியார் நிறுவனம் 10 மில்லியன் ரூபாவையும், உயர் நீதிமன்ற நீதியரசர்கள் சங்கம் 3 இலட்சம் ரூபாவையும், டிசில் குரே ஒரு இலட்சம் ரூபாவையும், முன்னாள் அமைச்சரவை அமைச்சு செயலாளர்களின் சங்கம் ஒரு மில்லியன் ரூபாவையும், ஸ்ரீலங்கா பொதுஜன பொறியியலாளர்கள் முன்னணி ஒரு மில்லியன் ரூபாவையும், இலங்கை கால்பந்து சம்மேளனம் 2 மில்லியன் ரூபாவையும், Bharti Airtel Lanka தனியார் நிறுவனம் 1.2 மில்லியன் ரூபாவையும், Certis Lanka Security Solution தனியார் நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவையும், ரிச்சட் பெர்னாண்டோ ஒரு மில்லியன் ரூபாவையும், எஸ்.ஏ. சமரதுங்க ஐம்பதாயிரம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்பு செய்தனர்.

இதன் மூலம் கொவிட்-19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஒரு பில்லியன் ரூபாவைக் கடந்திருந்தது. (இ-7)

# கட்டுநாயக்கவில் துப்பாக்கிப் பிரயோகம் 38 வயதுப்பெண் பலி!

(கொழும்பு)

கட்டுநாயக்க, மகாகம பகுதியில் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியாகினார்.

குறித்த துப்பாக்கிப்பிரயோகம் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் மீது மேற்கொள்ளப்பட்டது.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் கட்டுநாயக்க, மகாகம பகுதியில் வசித்த 38 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர் அடையாளம் காணப்பட்ட நிலையில் இச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை இடம்பெற்று வருகிறது. (இ-7-8)

# மின் துண்டிப்பு காரணமாக 45 ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

சீரற்ற காலநிலையை அடுத்து பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள மின் துண்டிப்பு காரணமாக சுமார் 45 ஆயிரம் பாவனையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, குருநாகல் மற்றும் அம்பாந்தோட்டை பகுதிகளிலேயே இவ்வாறு மின் துண்டிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-8)

# காற்றுடன் கூடிய மழையால் வீடு முழுமையாகச் சேதம்

## தெய்வாதீனமாக உயிர்தப்பிய வீட்டார்





(கொழும்பு)

கடும் காற்றுடன் கூடிய அடை மழையால் நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொட்டகலை, மேபீல்ட் தோட்டத்திலுள்ள வீடொன்று முழுமையாகச் சேதமடைந்தது.

நேற்று அதிகாலை 2.00 மணியளவிலேயே இவ்வனர்த்தம் இடம்பெற்றது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிராந்திய அதிகாரிகள் தகவல் வெளியிட்டனர்.

வீட்டின் கூரைகள் காற்றில் முழுமையாக அள்ளுண்டுசென்றன. முன்பகுதி சுவரும் இடிந்து விழுந்தது. எனினும், வீட்டிலிருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

இவ்வீட்டில் வசித்த தாய் மற்றும் மகன்மார் மூவரும் அயலவர் வீட்டில் தங்க வைக்கப்பட்டனர். இவர்களுக்கு தேவையான வசதிகளை தோட்ட நிர்வாகத்தினரும் கிராம உத்தியோகத்தரும் செய்து கொடுத்தனர்.(இ-7)

# சீரற்ற காலநிலையால் இருவர் உயிரிழப்பு

(கேகாலை)

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக கேகாலையில் இரண்டு மரணங்கள் பதிவாகின.

கேகாலை, வட்டாரம் கால்வாயில் அடித்துச் செல்லப்பட்ட ஒருவரும், வல்தெனிய பகுதியில் வீடொன்றில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 48 வயதுடைய ஆண் என்றும் மற்றவர் 65 வயதுடைய பெண் என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது. (ஐ)

# கொரோனா பரவலை வெற்றிகொண்டது போன்று பொருளாதாரத்தையும் வெற்றிகொள்ள வேண்டும்

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலை வெற்றி கொண்டது போன்று, பொருளாதார யுத்தத்தையும் வெற்றி கொள்ள வேண்டும். இல்லையேல் முழு நாடுமே தோல்வியைத் தழுவ நேரிடும் என்று தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரும் முன்னாள் நிதி அமைச்சருமான ரவி கருணாநாயக்க, அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு முயற்சிப்பதுடன், நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் பொருளாதாரத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார்.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கமைய பெருந்தொகையான கடற்படையினர் பாதிக்கப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டது.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகளை மாறுபட்ட முறையில் செயற்படுத்த வேண்டும் என்பதே எமது எண்ணமாக இருக்கின்றது.

இந்நிலையில் இந்த வைரஸ் பரவல் தற்போது இரண்டாவது அலையாக உருவெடுத்துள்ளது. சீனா - வுஹான் மற்றும் தென் கொரியாவை இதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியும். இந்நிலைமைக்கு நாமும் முகங்கொடுக்காமல், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் பணவீக்கம் அதிகரித்து வருகின்றது. இதேவேளை மூன்று மாதங்கள் வரை இறக்குமதிக்கும் அரசாங்கம் தடை விதித்தது.

அத்தியாவசியப் பொருட்களைத் தவிர்ந்த ஏனைய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்தாலும் அன்றாடம் மக்களின் வாழ்வாதாரத்திற்கு அவசியமான பொருட்களை இறக்குமதி செய்யவிடாமல் தடைவிதிப்பது முறையற்ற செயற்பாடாகும்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் உலக நாடுகள் எழுச்சி பெற்றது போன்று மீண்டும் கட்டியெழுப்ப வேண்டிய தருணம் தற்போது ஏற்பட்டுள்ளது.

தொழில்நுட்பத்தினூடாக முடியும் என்றால் தொழில்நுட்ப ரீதியிலாவது மீண்டெழ முயற்சிக்க வேண்டும். இந்தச் செயற்பாடுகளை வெறும் வார்த்தைகளால் சாதிக்க முடியாது. செயற்பாடுகள் ஊடாகவே மேற்கொள்ள வேண்டும்.

2015 ஆம் ஆண்டு நான் நிதி அமைச்சராக பதவிவகித்த போது அரச ஊழியர்களுக்காக 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை மேற்கொண்டதுடன் இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் ஓய்வூதியத் தொகையையும் அதிகரித்திருந்தேன். இது முன்னெடுக்க வேண்டிய முக்கிய செயற்பாடாகும்.

அரச ஊழியர்களின் ஊதியத்துக்காக 90 பில்லியன் செலவிடப்படுவதுடன், இதனைத் தொடர்ந்தும் செலவிட வேண்டியுள்ளதால், அரசாங்கம் இது தொடர்பில் சிந்தித்து செயற்பட வேண்டும்.

நாம் எந்த யுத்தத்தை வெற்றிகொண்டிருந்தாலும் கொரோனா வைரஸை வெற்றி கொண்டாலும் பொருளாதார யுத்தத்தை வெற்றி கொள்ளாவிட்டால் முழு நாடுமே தோல்வியைத் தழுவ வேண்டியேற்படும். குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும் 5000 ரூபாய் நிவாரணப்பணம் கட்சி பேதமின்றி மக்களின் நலன்புரி விருத்திக்காக வழங்கப்படும் நிதி போலவே பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

வங்கிக் கடன் தொடர்பில் சுற்றுநிருபத்தை வெளியிடாமல், நடைமுறைப்படுத்த வேண்டும். இந்தச் சலுகை கிடைக்கும் வரையில் மக்கள் எதிர்பார்ப்புடன் இருக்கின்றனர்.

இதேவேளை கொரோனா வைரஸ் தொற்றை தோல்வியடையச் செய்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இந்த நெருக்கடியான நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு முழு ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொடுக்கத் தயாராகவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முதியோர் கொடுப்பனவில் மோசடி; கிராம உத்தியோகத்தர் மீது விசாரணை

(குருமன்காடு)

வவுனியாவில் முதியோர் கொடுப்பனவில் மோசடி இடம் பெற்றதாக செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டையடுத்து குறித்த கிராம உத்தியோகத்தருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. வவுனியா, கோவில் குளம் பகுதியில் முதியோர் கொடுப்பனவின் போது முதியவர் ஒருவருக்கு கொடுப்பனவு வழங்கப்படாது அவரது பெயரில் வந்த கொடுப்பனவை கிராம உத்தியோகத்தர் பெற்றுக் கொண்டதாக பாதிக்கப்பட்டவரின் மகனால் நாளைய தேசம் மக்கள் குறைகேள் அமைப்பின் ஊடாக மாவட்ட அரச அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அத்துடன், குறித்த பணத்தை கேட்ட போது கிராம உத்தியோகத்தர் அதனை இராணுவத்திற்கு அனுப்பியுள்ளதாக தெரிவித்ததாகவும் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த முறைப்பாடு தொடர்பில் இராணுவத்தினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக நாளைய தேசம் மக்கள் குறைகேள் அமைப்பினர் தெரிவித்ததுடன், மாவட்ட செயலகத்தினரும் வாக்கு மூலங்களைப் பெற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தனர். (ஜ-4-250)

# விபத்தில் இரு சகோதரிகள் உயிரிழப்பு! நீதிகோரி மன்னாரில் போராட்டம்



(மன்னார்)

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, பரப்பான் கண்டல் சந்தியில் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் சகோதரிகள் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை செலுத்தி வந்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இறந்த சகோதரிகளின் உடல் அடக்கம் செய்யப்பட முன்னதாகவே பதில் நீதவான் முன்னிலையில் உடனடியாக ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்டார்.

இந்த நிலையில் குறித்த இரு சகோதரிகளின் மரணத்திற்கும் நீதி கோரி குடும்ப உறவுகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் அமைதியான முறையில் சமூக இடைவெளிகளை பேணி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற் கொண்டு மக்கள் ஒன்று கூடி இவ்வாறான போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. எனவே இவ்விடத்தை விட்டு உடனடியாக செல்லுமாறு கோரிக்கை விடுத்தார்.

எனினும் அவர்கள் அவ்விடத்தில் இருந்து செல்லாத நிலையில் பொலிஸாரின் உதவியுடன் போராட்டத்தில் ஈடுபட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என சுமார் 16 பேர் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

பின்னர் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டதோடு, இவ்வாறான போராட்டங்களை தற்போதைய சூழ்நிலையில் செய்ய முடியாது என எச்சரித்ததோடு, உங்களின் பிரச்சினை தொடர்பில் மன்னார் நீதிமன்றத்தின் உதவியை நாடுமாறு கோரி விடுவித்தனர். இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் இருந்து வீடு திரும்பினர். (4-285)

# கசிப்பு உற்பத்தி; இருவர் கைது



(நெளுக்குளம்)

வவுனியா தவசிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்தார்கள் என்ற சந்தேகத்தில் நேற்று முன்தினம் இரவு இருவர் கைது செய்யப்பட்டனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து தவசிகுளம் பகுதியில் பொலிஸார் நடத்திய சோதனையில் மக்கள் நடமாட்டமற்ற பகுதியில் இருவர் கசிப்பு உற்பத்தி செய்து வந்த நிலையில் கைது செய்யப் பட்டனர்.

இவர்களிடமிருந்து 50 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டதுடன் கசிப்பு உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்திய பொருட்களையும் மீட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியாவில் அண்மைக் காலமாக கசிப்பு உற்பத்தி அதிகரித்து வரும் நிலையில் பொலிஸார் அதனை இல்லா தொழிக்க கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4-299)

# வேலங்குளம் முகாமிலிருந்து 180 பேர் விடுவிப்பு




(நெளுக்குளம்)

வவுனியா வேலங்குளம் விமானப்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமுக்கு கடந்த இரு வாரங்களிற்கு முன்னர் கடற்படையைச் சேர்ந்த குடும்பத்தினர்கள் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாமில் பணியாற்றிய 400 இற்கும் மேற்பட்ட கடற்படை உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று நோய் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. இந்நிலையில் குறித்த முகாமில் கடமையாற்றிய கடற்படை வீரர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் தனிமைப் படுத்தும் நடவடிக்கைக்குட்படுத் தப்பட்டனர்.

இந்நிலையில் வவுனியா வேலங்குளத்தில் அமைந்துள்ள குறித்த முகாமிற்கு கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்களென 180 பேர் பேருந்துகளின் மூலம் அழைத்துவரப்பட்டு தனிமைப் படுத்தும் நடவடிக்கைக்குட் படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் கொவிட்-19 தொற்று இல்லை என்று உறுதிப் படுத்தப்பட்ட 180 பேர் நேற்று முன்தினம் தமது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டமைக்கான சான்றிதழ்களும் இதன்போது வழங்கி வழங்கப்பட்டன.

நீர்கொழும்பு, அநுராதபுரம், குருநாகல், பொல்காவல, ரம்பாவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்படை வீரர்களின் குடும்ப உறுப்பினர்களே இதன்போது விடுவிக்கப்பட்டனர். (ஜ-4-299)

# சட்டவிரோத செயல்கள் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை ஈச்சமோட்டைப்பகுதியில் நேற்று முன்தினம் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 டிப்பர்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அன்றையதினம் ஊழவனூர் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவரும் கல்மடு இரட்டைப்பனைக் குளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியிலீடுபட்ட சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து 85 லீற்றர் கசிப்பும் 1250 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் இவர்கள் ஐந்து பேரும் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஜ-4-316)

# கொழும்பிலிருந்து வவுனியா சென்ற 11 பேர் சுய தனிமைப்படுத்தல்

(குருமன்காடு)

கொழும்பில் இருந்து வவுனியாவிற்கு வருகை தந்த 11 பேர் அவர்களது வீடுகளில் நேற்று சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

தொழில் வாய்ப்பு மற்றும் வேறு தேவைகளின் பொருட்டு கொழும்பு சென்று கொரோனா தாக்கம் மற்றும் ஊரடங்குச் சட்ட நடைமுறை காரணமாக வவுனியாவிற்கு வர முடியாத நிலையில் இருந்த 11 பேர் கொழும்பில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவுகளை மேற்கொண்ட நிலையில் பொலிஸாரால் வவுனியாவிற்கு அழைத்து வரப்பட்டனர்.

குறித்த 11 பேரையும் பார்வையிட்ட சுகாதாரப் பரிசோதகர்கள் பாதுகாப்பு கருதி அவர்களை 14 நாட்கள் அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர். அதற்கமைவாக அவர்களது வீடுகள் தனிமைப்படுத்தப்பட்டன. (ஜ-4-250)

# நினைவேந்தல் அஞ்சலி செலுத்தியோரின் வீடுகளுக்குச் சென்று பொலிஸார் விசாரணை

(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நாளான கடந்த 13 ஆம் திகதி முல்லைத்தீவு மாங்குளம் பகுதியில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியோரின் வீடுகளுக்கு கடந்த 14 ஆம் திகதி சென்று பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துஜன் தெரிவித்தார்.

சிவில் உடை தரித்த தம்மை பொலிஸார் என அடையாளப் படுத்தியவர்கள் இவ்வாறு ஒவ்வொருவரினதும் வீடுகளுக்குச் சென்று நினைவேந்தல் நிகழ்வைச் செய்தவர்களது பெயர் விபரங்களை கேட்டு விசாரணை மேற்கொண்டதோடு பதிவுகளையும் மேற்கொண்டனர்.

மேலும் விசாரணைகளை மேற்கொண்டவர்களிடம் மீண்டும் சிறை செல்லப் போகின்றீர்களா? எனவும் மிரட்டல் விடுத்தனர். அத்தோடு இவ்வாறான நிகழ்வுகளை செய்வதாக இருந்தால் முற்கூட்டியே பொலிஸாரின் அனுமதியைப் பெற வேண்டும் எனவும் கூறிச் சென்றுள்ளதாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் தெரிவித்தார்.

மேலும் நினைவேந்தல் மேற்கொண்ட இடத்துக்குச் சென்ற விசேட அதிரடிப்படையினர் மற்றும் அரச புலனாய்வாளர்கள், பொலிஸார் ஆகியோர் அப்பகுதியில் உள்ள மக்களிடம் விசாரணைகளை மேற்கொண்டதோடு அப்பகுதியில் சோதனை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# கொரோனாவால் அமெரிக்காவில் மட்டும் 87 ஆயிரம் பேர் மரணம்



(நியூயோர்க்)
கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு அமெரிக்காவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 87 ஆயிரத்தைக் கடந்தது.

உலகம் முழுவதும் 213 நாடுகள்/பிரதேசங்களுக்கு கொரோனா வைரஸ் இதுவரை பரவியது.

நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி, உலகம் முழுவதும் 45 இலட்சத்து 81 ஆயிரத்து 519 பேருக்குக் கொரோனா உறுதி செய்யப்பட்டது.

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் 25 இலட்சத்து 40 ஆயிரத்து 72 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுபவர்களில் 45 ஆயிரத்து 256 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது.

வைரஸ் பாதிப்பிலிருந்து 17 இலட்சத்து 35 ஆயிரத்து 775 பேர் குணமடைந்தனர். ஆனாலும் இந்தக் கொடிய வைரஸுக்கு 3 இலட்சத்து 5 ஆயிரத்து 672 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டு பிடிக்கப்பட்ட கொரோனா அமெரிக்காவைப் புரட்டி எடுத்து வருகிறது. கொரோனா பாதிப்பிலும் உயிரிழப்பிலும் அமெரிக்கா உலகளவில் முதலிடத்திலுள்ளது.

கொரோனாவால் அதிக உயிரிழப்பைச் சந்தித்த நாடுகள் விபரம்:

அமெரிக்கா - 87 ஆயிரத்து 303, இங்கிலாந்து - 33 ஆயிரத்து 998, இத்தாலி - 31 ஆயிரத்து 610, ஸ்பெயின் - 27 ஆயிரத்து 459, பிரான்ஸ் - 27 ஆயிரத்து 425, பிரேசில் - 14 ஆயிரத்து 267, பெல்ஜியம் - 8 ஆயிரத்து 959, ஜேர்மனி - 7 ஆயிரத்து 933, ஈரான் - 6 ஆயிரத்து 902, நெதர்லாந்து - 5 ஆயிரத்து 643, கனடா - 5 ஆயிரத்து 499 என்பனவாகும். (இ-7)

# கொரோனாவால் பாதிப்பு 46 இலட்சத்தைத் தாண்டியது

(ஜெனிவா)
உலகம்முழுவதும்கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 46 இலட்சத்தைத் தாண்டியது.

சீனாவின் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது. தற்போது உலகின் 213 நாடுகளுக்குப் பரவிய இந்த வைரஸ் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 46 இலட்சத்தைத் தாண்டியது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. கொரோனா வைரஸுக்கு உலகம் முழுவதும் 3 இலட்சத்து 7 ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அம்பாறையில் பலத்த காற்று, மழை சில பகுதிகளில் மின்சாரம் துண்டிப்பு



(சம்மாந்துறை)
அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் திடீரென வீசிய பலத்த காற்று மற்றும் மழையால் பொதுமக்கள் சிரமத்திற்குள்ளாகினர்.

அம்பாறை நகரப்பகுதி காரைதீவு, கல்முனை, மருதமுனை, பெரியநீலாவணை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, மணல்சேனை மற்றும் சம்மாந்துறை, சவளைக்கடை, மத்தியமுகாம் போன்ற பகுதிகளில் வீசிய சுழல் காற்று காரணமாக வீதிகளில் அதிகளவிலான தூசு மண் வீசப்பட்டன.

இதனால் பயணிகள் அசௌகரியத்திற்குள்ளாகினர். சில பகுதிகளில் பாரிய மரங்கள் முறிந்து விழுந்துள்ளதால் வீதிப் போக்குவரத்துக்குத் தடைகள் ஏற்பட்டன.

சில பகுதிகளில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் மழை நீர் தேங்கி வெள்ள நிலைமை ஏற்பட்டிருந்தது. தற்போது காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் விழிப்புடன் செயற்படுமாறு பல்வேறு தரப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் பலவற்றிலும் நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மாலை வேளையில் கடும் காற்றுடன் மழையும் பெய்து வருகின்றது.

இதனால் தற்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதோடு, மீனவர்கள் கடலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக, மீனவர்கள் சுட்டிக்காட்டினர். (இ-7)

# ரஷ்யாவை துரத்தும் கொரோனா மீண்டும் ஒரே நாளில் மட்டும் 10 ஆயிரத்தைத் தாண்டியது பாதிப்பு



(மொஸ்கோ)
ரஷ்யாவில் கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை மீண்டும் 10 ஆயிரத்தைக் கடந்தது.

கொரோனா வைரஸ் ரஷ்யா நாட்டில் ஆரம்ப காலகட்டத்தில் கட்டுப்பாட்டிற்குள் இருந்த நிலையில், தற்போது அங்கு கோரத் தாண்டவமாடி வருகிறது.

இந் நிலையில், நேற்றுக் காலை 9 மணிக்கு முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 10 ஆயிரத்து 598 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்மூலம் ரஷ்யாவில் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை தற்போது 2 இலட்சத்து 62 ஆயிரத்து 843 ஆக அதிகரித்தது.

கொரோனா தொற்றுக்கு நேற்று 113 பேர் உயிரிழந்ததால், அங்கு பலியானோர் எண்ணிக்கை 2,418 ஆக அதிகரித்தது.

மேலும் அங்கு கொரோனா தொற்றிலிருந்து 58 ஆயிரத்து 226 பேர் முழுமையாக சிகிச்சை பெற்று குணமடைந்து வீடு திரும்பினர். உலகளவில் கொரோனா பாதிப்பில் ரஷ்யா 3 ஆவது இடத்திலுள்ளது. (இ-7)

# மியன்மாரில் சிக்கித்தவித்த 74 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மியன்மாரில் சிக்கித்தவித்த 74 இலங்கையர்கள் நாடு திரும்பினர்.

மியன்மார் நாட்டிற்குச் சொந்தமான விசேட விமானத்தின் ஊடாகவே குறித்த 74 பேரும் நேற்று நண்பகல் 12.05 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும், தாயகம் திரும்பிய இவர்கள் அனைவரையும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு இராணுவத்தினர் அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (இ-7)



# கொரோனா பாதிப்பில் சீனாவை முந்திய இந்தியா 85 ஆயிரத்து 940 பேருக்கு தொற்று



(டில்லி)
இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 86 ஆயிரத்தை நெருங்கியுள்ள நிலையில் வைரஸ் பாதிப்பு எண்ணிக்கையில் சீனாவை முந்தியது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு, நோய் அறிகுறியுள்ளவர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல் உள்ளிட்ட பல்வேறு நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெறுகின்றன.

தற்போது கொரோனா பாதிப்பு குறைவாகவுள்ள பகுதிகளில் ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, பல்வேறு தொழில்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

அதேசமயம், பரிசோதனைகளை அதிகரிக்க அதிகரிக்க, புதிய நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்பு தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்று வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் மொத்தம் 85 ஆயிரத்து 940 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர். கொரோனா வைரஸால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2752 ஆக உயர்ந்தது. இதுவரை 30 ஆயிரத்து 153 பேர் கொரோனா பாதிப்பிலிருந்து மீண்டனர்.

இதன்மூலம் கொரோனா பாதிப்பில் சீனாவை இந்தியா முந்தியதுடன், உலகளவில் 11 ஆவது இடத்திற்குச் சென்றது.

கொரோனா வைரஸ் வெளிப்பட்ட சீனாவில் இதுவரை 82 ஆயிரத்து 941 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 4633 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரணில்-ராஜபக்ஷ தரப்பு ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்த முயற்சி

## சுஜீவ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ரணில் - ராஜபக்ஷ தரப்பினர் ஒன்றிணைந்து ஐக்கிய மக்கள் சக்தியை பலவீனப்படுத்துவதற்கு முயற்சிப்பதாக தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக எத்தகைய வழக்குகளை தொடர்ந்தாலும் அதனை வெற்றி கொள்வதாகவும், தங்களது கட்சி தொடர்பில் எந்தவித சட்டச்சிக்கலும் இல்லை எனவும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி நீதியான முறையிலேயே ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கான அனுமதியை தேர்தல்கள் ஆணையகமும் வழங்கியது.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷாக்களுடன் கொண்டுள்ள டீல் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் எமது கட்சியின் சட்டச் சிக்கல் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

எந்தவித வழக்கைத் தொடர்ந்தும் எம்மைப் பலவீனப்படுத்த முடியாது.

நாட்டிலுள்ள சிறந்த ஜனாதிபதி சட்டத்தரணிகள் எம்மோடு இணைந்துள்ளனர். அதனால் எந்த வழக்கையும் நாங்கள் இலகுவில் வெற்றி கொள்வோம்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதற்கான வசதிகளும் இல்லாத நிலையில் எமது கட்சி தொடர்பில் பிரசாரத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

கடந்த காலங்களில் ரணில் தரப்பினர்களாலேயே எமக்கு பெரும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. தற்போது அந்த குழுவினர் எம்மை விட்டு விலகிச் சென்றுள்ளதால், எமக்குச் சுயாதீனமாக செயற்பட முடியும். ராஜபக்ஷாக்களுக்கு சவால் ஏற்படுத்தும் ஆளுமை எம்மிடம் உள்ளது.

அதனால் யாருடைய எதிர்ப்புக்களையும் கண்டு அச்சம் கொள்ளமாட்டோம். பொதுத் தேர்தலை நடத்துதல் தொடர்பில் எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

நாளை தேர்தலை நடத்துவதென்றாலும் போட்டியிடுவதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலையில் நாடு இல்லை. கொரோனாத் தொற்றால் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையில் மக்கள் தற்போது ஒரு வேளை உணவைப் பெற்றுக் கொள்வதிலும் சிக்கலை எதிர்நோக்கி வருகின்றனர்.

அரசாங்கம் அரசியலமைப்பை மீறிச் செயற்படுவதைக் கண்டும் நாங்கள் எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் இருப்பதற்கான காரணம் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையைத் தடுப்பதற்காக அரசாங்கம் எவ்வாறான முயற்சிகளை எடுத்தாலும், அதற்கு இடையூறு விளைவிக்கக்கூடாது என்பதற்காகவே.

அரசியலமைப்பை மீறி நிதி ஒதுக்கீடு, கடன் பெறுதல் மற்றும் நாணய அச்சிடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் நாங்கள் அமைதி காத்து வருகின்றோம்.

இந்தச் செயற்பாடுகளூடாக எதிர்வரும் சந்ததியினர் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதற்காக பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டி நிதி ஒதுக்கீடுகளை முறையாக செய்யுமாறு நாங்கள் கோரிக்கை விடுத்தபோதிலும் அரசாங்கம் அது தொடர்பில் எவ்விதக் கவனமும் செலுத்தத போதிலும் மக்களும் அதற்கு இணக்கப்பாட்டை காட்டாத நிலையில் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு எமக்கும் விருப்பமில்லை.

இறக்குமதியாளர்கள் பலர் நட்டத்தில் இருக்கின்றனர். கொரோனா நெருக்கடியால் உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் முறையான முகாமைத்துவம் இல்லாவிட்டால் ஏனைய ஆசிய நாடுகளையும் விட பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

இந்நிலையில் அரச ஊழியர்களின் ஊதியத்தை நிறுத்த முயற்சிப்பது நியாயமற்ற செயற்பாடாகும்.

எதிர்வரும் மாதங்களில் நீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட கட்டணங்கள் மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக பெரும் தொகையான செலவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில் ஊதியத்தை நிறுத்தினால், இவர்கள் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது. இந்நிலையில் கொரோனா தொற்றை விட மாரடைப்பால் உயிரிழப்பவர்களின் தொகை அதிகரிப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது.

இந்நிலையில் மக்களுக்கு என்ன அனர்த்தம் ஏற்பட்டாலும் கொரோனாவின் நிழலில் தேர்தலை வெற்றி கொள்ள முயற்சிக்கும் அரச தரப்பினர் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதை விடுத்து தேர்தல் தொடர்பிலே அக்கறை செலுத்தி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையில் ஊரடங்கால்

# காட்டு விலங்கு வேட்டை அதிகரிப்பு

## சுற்றுச் சூழலியலாளர்கள் கவலை

(கொழும்பு)

இலங்கையில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதற்குப் பிறகு, காட்டு விலங்குகளை வேட்டையாடுதல் அதிகரித்தது.

மார்ச் மாதம் முதல் மே மாதம் முதலாம் திகதி வரையில் தினமும் 600 காட்டுப் பறவைகள் மற்றும் விலங்குகள் வேட்டையாடப்பட்டு இருப்பதாக இலங்கை சுற்றுச்சூழலியலாளர்கள் தெரிவித்தனர்.

ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதால் தேசிய பூங்காவில் பார்வையாளர்கள் வருகை நிறுத்தப்பட்டது. இதனால் வேட்டையாளர்கள் எந்தவித தடங்கலுமின்றி காட்டு உயிரினங்களை வேட்டையாடி வருவதாக சுற்றுச் சூழலியலாளர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து இலங்கை சூழலியலாளர் நயனகா ரன்வெல்ல தெரிவிக்கையில், தினமும் 50 முதல் 100 வேட்டைக்காரர்கள் தேசிய பூங்காவிற்குள் வருகின்றனர்.

கிட்டத்தட்ட 600 இற்கும் மேற்பட்ட காட்டு விலங்குகள் தினமும் வேட்டையாடப்படுகின்றன. மான்கள், முள்ளம்பன்றிகள் அதிகளவில் வேட்டையாடப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

இலங்கையில் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் மே மாதம் முதலாம் திகதி வரையில் காட்டு விலங்குகளை வேட்டையாடிய தன் காரணமாக 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது முந்தைய மாதங்களில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட அதிகமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 12,482 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

கடந்த மார்ச் மாதம் 18 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை 6 மணிவரையான காலப்பகுதியில் 12 ஆயிரத்து 482 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

அதில் 4808 பேர் தண்டனைக்குரிய குற்றவாளிகள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கொழும்பு, கம்பஹாவில் நேற்று முன்தினம் காலை 6 மணிமுதல் நேற்றுக் காலை ஆறு மணிவரையான 24 மணித்தியாலங்களில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 559 பேர் கைது செய்யப்பட்டனர்.

அதற்கமைவாக கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 55 ஆயிரத்து 506 பேர் கைது செய்யப்பட்டதுடன் 15 ஆயிரத்து 216 வாகனங்களும் கைப்பற்றப்பட்டன என பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (இ-7)

இலங்கை
கிறிஸ்தவ திருமண
இணைப்பு சேவை
FB:- Srilankan Ch
Matrimony
(2646)
0778779182

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு
மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா: செவ் 5 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BA, Cima, Electronic Assembler in UK
எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்
தொ.இ: B/10744

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த அலுவலகப் பணியாளர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்
தொ.இ: B/10745

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: 48 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: B.Sc, MSc, Cashier in London
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR உள்ள பெண்
தொ.இ: B/10746

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 22½ செவ் 6 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த Phone shop owner
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/10748

இவர்களுக்கு
மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 71, சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: B.Com Spe. Profeet Officer
எதிர்பார்ப்பு: உத்தியோகம், கணவனை இழந்தவர், ஒரு பிள்ளை உண்டு, விவாகரத்தானவர்கள், தாரம் இழந்தவர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/10794

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அத்தம் 2
கி.பா: செவ் 9 இல் உயரம்: 160cm
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/10796

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 55 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த Hospital attendant
எதிர்பார்ப்பு: சாதாரண நிரந்தர தொழில், விவாகரத்தானவர், விவா கரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/10798

பிறப்பு: 1991 கிறிஸ்தவம்
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 3சூரி,செவ் 7இல் உயரம்: 5'4"
தகைமை/தொழில்:க.பொ.த.உ/த எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: G/7202

கல்யாணமாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு: 021 720 1005, 021 221 5434
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்: - காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை
விடுமுறை தினம்:-ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 14.05.2020- 15.06.2020

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## துலாம்

[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]



சார்வரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத்தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் புதன் வீட்டிலும் புதன் சுக்கிரன் வீட்டிலுமாக பரிவர்த்தனை பெற்றுச் சஞ் சரிக்கின்றார்கள். 3 ஆம் இடத்தில் சஞ்ச ரிக்கும் சனியும் கேதுவும் உங்கள் இராசி நாதன் சுக்கிரனைப் பார்க்கின்றார்கள். எனவே ஆரோக்கியத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் தேவை. இராசிக்கு 4 ஆம் இடத்தில் குரு பகவான் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் வக்கிரம் பெறுவதால் உத்தியோ கத்தில் மாற்றங்கள் வரலாம்.

செவ்வாய் பலம் நன்றாக இருக்கின்றது. பொதுவாக 9 இல் ராகு இருப்பதால் பெற்றோர் வழியில் பிரச்சினைகள் உருவாகும்.

### மிதுன புதனின் சஞ்சாரம்!

உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங் களுக்கு அதிபதியானவர் புதன். மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் மறைந்திருக் கின்றார். மே 24 ஆம் திகதி 9 ஆம் இடத்திற்கு வருகின்றார். மிதுன இராசி அவருக்கு சொந்த வீடாகும். 9 ஆம் இடம் பூர்வ புண்ணிய ஸ்தானமாகவும் கருதப் படுவதால் பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் அகல வழிபிறக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

### ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்!

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் ஜுன் 3 ஆம் திகதி வக்கிர இயக்கத்தில் பின்னோக்கி வந்து ரிஷப இராசிக்குள் அடியெடுத்து வைக்கின்றார். அஷ்டமாதிபதி அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் ஒருசில இழப்புகள், விரயங்கள் மன அமைதிக் குறைவுகள், நோய், நொடித் தாக்கங்கள் ஏற்படலாம். மேலும் உதவுவதாகச் சொன் னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கும் நிலை போன்றவைகள் உரு வாகலாம். பொறுமையும், நிதானமும் தேவைப்படும் நேரமிது.

விலை உயர்ந்த பொருட்களை ஒருசிலர் விற்க நேரிடும். வீடு மாற்றங்கள், இடமாற் றங்கள் உறுதியாகும். என்ன இருந்தாலும் உறவினர்களுக்காக ஒரு தொகையைச் செலவிட வேண்டிய சூழ்நிலை உருவா கலாம். இரத்த அழுத்தம், நீரழிவு நோய் போன்றவைகள் ஏற்பட்டு அகலும். இக் காலத்தில் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக்கொள்ளுங்கள். இம்மாதம் அஷ்டமத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் சிவகவசம் பாடி இல்லத்து பூஜை அறையில் சிவபெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் சுய கட்டுப்பாடோடு இருந்து ஆரோக்கியத்தைச் சீராக வைத்துக் கொள் வது நல்லது. குடும்ப ஒற்றுமைக்கு குறுக் கீடாக இருந்தவர்கள் விலக ஆயத்தம் செய்வர். கணவன்-மனைவிக்குள் அன்பும், அரவணைப்பும் கூடும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். உடன்பிறப்புகள் உங்கள் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பர். இல்லத்து பூஜை அறையில் நவக்கிரக கவசம் பாடி வழிபட்டால் நன்மைகள் கிடைக்கும்.

## விருச்சிகம்

[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

சார்வரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் இராசிநாதன் செவ்வாய் சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியைச் சூரியனும் புதனும் பார்க்கி றார்கள். அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் புதன் வீட்டிலும் அஷ்டமாதிபதி புதன் சுக்கிரன் வீட்டிலும் பரிவர்த்தனை பெற்றுச் சஞ்சரிக்கின்றார்கள். இம்மாதத் தொடக்க நாளில் குருவோடு சந்திரன் இணைந்து சகாய ஸ்தானத்தில் இருக்கின்றார்கள். எனவே குருச்சந்திர யோகம், புத ஆதித்ய யோகம், புத சுக்கிர பரிவர்த்தனை யோகம் போன்ற மூன்று விதமான யோகங்களோடு இம்மாதம் பிறக்கின்றது.

### மிதுன புதனின் சஞ்சாரம்!

மே 24 ஆம் திகதி மிதுன இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு மிதுன இராசி எட்டாமிடமாகும். எட்டாம் இடத்தை மறைவிடம் என்று சொல்வது வழக்கம். "மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும்" என்பார்கள். அந்த அடிப்ப டையில் பார்க்கும் பொழுது பொருளா தாரத்தில் நிறைவு ஏற்படும். தொழில் மற்றும்



உத்தியோகத்தில் எதிர்பார்த்த பலன் உண்டு. பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. மேலதி காரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். கேட்ட சலுகைகள் கிடைக்கும். ஊர் மாற் றங்கள், உத்தியோக மாற்றம் கூட ஒரு சிலருக்கு ஏற்படலாம்.

### ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்!

இதுவரை மிதுன இராசியில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் ஜுன் 3 ஆம் திகதி பின்னோக்கி வந்து வக்கிர இயக்கத்தில் ரிஷப இராசிக்குள் வருகின்றார். அப்பொழுது சுக்கினின் பார்வை உங்கள் இராசிக்குள் பதிகின்றது. எனவே அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும். பக்கபலமாக இருக்கும் நண் பர்களில் ஒருசிலர் ஒத்துழைப்பு செய்ய மறுத்தாலும் புதிய நண்பர்கள் வந்திணை ந்து பொருளாதார விருத்திக்கு அடிகோலுவர். குடும்பத்திற்குத் தேவையான அத்தியா வசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

உறவினர்கள் உங்களுக்கு ஒத்துழைப்புச் செய்ய முன்வருவர். பிள்ளைகள் படித்து முடித்து வேலையில்லாமல் வீட்டில் இருந் தால் இப்பொழுது நல்ல வேலை கிடைப் பதற்கான அறிகுறிகள் தென்படும். ராகு-கேதுக்களுக்கு இடையில் மற்ற கிரகங்கள் சஞ்சரிப்பதால் கால சர்ப்ப தோஷத்தின் அமைப்பில் இம்மாதக் கிரக நிலைகள் இருக்கின்றது. எனவே எதையும் முன் கூட்டியே திட்டமிட வேண்டாம்.

இம்மாதம் இல்லத்துப் பூஜையறையில் கற்பக விநாயகர் படத்தை வைத்து கற்பக கவசம் பாடி வழிபடுவதோடு, விளக்கு பூஜையும் செய்வது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் புத ஆதித்ய யோகம் இருப் பதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதி கரிக்கும். பிள்ளைகளின் எதிர்காலம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தாய்வழி ஆதரவு உண்டு. ஆரோக்கியத் தில் கவனம் தேவை. பிரதோஷ நாளில் இல்லத்திலேயே நந்தியெம்பெருமானை யும் சிவனையும் உமையவளையும் நினைத்து பதிகம் பாடி வழிபட்டால் பலன் கள் கிடைக்கும்.

## தனுசு

[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]



சார்வரி வருடம் வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குருபகவான் நீச்சம் பெற்று வலிமை இழந்து சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசியிலேயே சனியும் கேதுவும் வீற்றிருக்கின்றார்கள். சனி வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். குருவும் வக்கிர இயக்கத்தில் தான் இருக் கின்றார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இம்மாதம் தொடங்குவதால் ஆரோக்கியம் மட்டுமல் லாமல் அனைத்து வழி களிலும் கூடுதல் கவ னம் தேவைப்படும். நோய் தொற்றின் கார ணமாக வீட்டில் இரு என்றும் சமுதாய இடைவெளி தேவை என்று அரசாங்கம் சொல்லியதைக் கடைப்பிடிப்பது நல்லது.

### மிதுன புதனின் சஞ்சாரம்!

மே 24 ஆம் திகதி மிதுன இராசிக்குப் புதன் செல்கின்றார். உங்கள் இராசிக்கு 7 ஆம் இடமும் 10 ஆம் இடமும் புதனுக்குரிய வீடாகும். 7 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் அந்த ஸ்தானத்திற்கு வரும்பொழுது திருமணம் போன்ற சுபகாரியங்கள் இல் லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். உதா சீனப்படுத்திய உறவினர்கள் கூட இனி உதவி செய்வதாகச் சொல்வர். வெளிநாட்டிலிருந்து நீங்கள் எதிர்பார்த்த தகவல் அனுகூலமாக வந்து சேரும்.

### ரிஷப சுக்கிரனின் சஞ்சாரம்!

மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிக்கு 7 ஆம் இடத்தில் சுக்கிரன் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிநாதன் குருவிற்கும் சுக்கிரன் பகை கிரகமாகும். அவர் ஜுன் 3 ஆம் திகதி ரிஷப இராசிக்கு வக்கிர இயக்கத்தில் பின்னோக்கி வருகின்றார். உங்கள் இராசிக்கு அது 6 ஆம் இடமாக இருப்பதால் நல்ல பலன்களே வந்து சேரும். "கெட்டவன் கெட்டிடின் கிட்டிடும் இராஜயோகம்" என்ப தற்கேற்ப எதிர்பாராத சில திருப்பங்களை கொடுக்கலாம். எதிர்பார்ப்புகளும் நிறை வேறும். பணிநிறுத்தம் செய்யப்பட்ட வர்களுக்கு மீண்டும் உத்தியோகம் கிடை க்கும்.

வழக்குகள் சாதகமாக முடிவதற்கான அறிகுறிகள் தென்படும். பழைய கடன்கள் அடைபடும். மேலதிகாரிகள் பாராட்டும் விதத்தில் உங்கள் திறமை பளிச்சிடும். இல்லத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். உயர்ந்த நிலையை அடைந்தாலும் கடந்து வந்த பாதையை மறக்காதவர்கள் என்று நண்பர்களால் பாராட்டப்படுவீர்கள். ஒதுங் கிச் சென்ற ஒப்பந்தங்கள் கூட மீண்டும் வரலாம்.

இம்மாதம் இல்லத்து பூஜையறையில் ஆதியந்தப்பிரபு படத்தை வைத்து விநாயகர் மற்றும் அனுமனுக்குரிய பாடல்கள் பாடி வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் ஜென்மச் சனியின் ஆதிக் கமும் ஜென்ம கேதுவின் ஆதிக்கமும் இருப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன்-மனைவிக்குள் ஒருவ ரையொருவர் புரிந்து கொண்டு செயற் பட்டால் பிணக்குகளும் பிரச்சினைகளும் ஏற்படாது. பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். பணிபுரியும் இடத்தில் சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

(தொடரும்)

# தமிழர் தாயகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்





(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் மூன்றாம் நாள் நினைவஞ்சலி நிகழ்வுகள் மற்றும் குமுதினிப் படுகொலை நினைவு தினமும் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ பீடத்தின் முன்பாக இரவு 7 மணியளவில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது. (இ-7)



முள்ளிவாய்க்காலில் மக்கள் படுகொலை செய்யப்பட்டதன் 11 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நாளை 18 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 13 ஆம் திகதி சுடர் ஏற்றி ஆரம்பிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்தில் சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தப்பட்டது. (ஜ-4-281)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் நாட்கள் கடந்து செல்கின்ற நிலைமையில் கடந்த 15 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் இம் மாதத்திற்கான அமர்வு இடம்பெற்றது. இந்த அமர்வில் முன்னதாக முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதனைத் தொடர்ந்து அன்றைய அமர்வுகள் இடம்பெற்றன. புதுக்குடியிருப்புப் பிரதேச சபை தவிசாளர் செல்லையா பிறேமகாந் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் முதலில் உயிரிழந்த உறவுகளுக்காக அகவணக்கம் செலுத்தப்பட்டு மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஜ-4-281)

## இரத்ததானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் இரத்ததான முகாம் இடம் பெறும்.

காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இடம் பெறும் குறித்த இரத்ததான முகாமில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொண்டு உதிரம் கொடுத்து உயிர்காக்கும் உன்னதப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டனர். (இ-18)

# மரண அறிவித்தல்



தோற்றம் 19.07.1949 மறைவு 16.05.2020

## திரு. அம்பலவானன் ஸ்ரீகரன்

### (ஆயுர்வேத வைத்தியர், சுதுமலை வைத்தியம்)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆயுர்வேத வைத்தியர் அம்பலவானன் ஸ்ரீகரன் (முன்னாள் விவசாய ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி) 16.05.2020 சனிக்கிழமையன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆயுர்வேத வைத்தியர் அம்பலவானன்- பார்வதிப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான தர்மலிங்கம்- யோகவதியின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும் மேகலா (கனடா), வாசுகி(கனடா), சுபாஷினி (சுதுமலை), சுகந்தினி (சுதுமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார் (கனடா), பாலஷாந்தன் (கனடா), அருள்வேல் (சுதுமலை), மதிவண்ணன் (கனடா), ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜனுஷன், விஷாதன், ஹரிஷன், மாதினி, அஜய், விஜய், அஷ்வின், ஷாயினி, ஆதினி ஆகியோரின் அன்புப் பேரனும்

Dr.பொன்னம்பலம், காலஞ்சென்றவர்களான இராசாத்தி, சண்முகநாதன், கெங்காதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மனோகரன், புஷ்பராணி, கருணாகரன், ஜெயகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.05.2020 நாளை திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுதுமலை (2842) 076 187 9228 தகவல்:- குடும்பத்தினர்

# விஷச்சாராயம் குடித்த 35பேர் பரிதாபமாக பலி!

(மெக்சிகோ சிட்டி)

**ஊரடங்கு காரணமாக மெக்சிகோவில் மதுக்கடைகள் மூடப்பட்டுள்ளதால் கள்ளச்சந்தையில் விற்கப்பட்ட விஷச்சாராயம் குடித்த 35 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

கொரோனா வைரஸால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட முதல் நாடாக அமெரிக்கா உள்ளது. அதன் அயல் நாடான மெக்சிகோவில் கொரோனா வைரஸ் பாதிப்பு மிகத் தீவிரமாக உள்ளது.

அந்த நாட்டில் இதுவரை 42 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது. 4 ஆயிரத்து 400இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். வைரஸ் பரவலை கட்டுப்படுத்த மெக்சிக்கோ முழுவதும் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டு மக்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஊரடங்கு காரணமாக மெக்சிக்கோவில் மதுக்கடைகள் மூடப்பட்டன.

இதனால் மது கிடைக்காமல் அல்லறபடும் மதுப்பிரியர்கள் கள்ளச்சந்தையில் விற்கப்படும் மெதனோல் என்ற வேதிப்பொருள் கலந்த விஷச்சாராயத்தை வாங்கி குடித்து வருகின்றனர்.

இந்த நிலையில் பியூப்லா மாகாணத்தில் மெதனோல் கலந்த விஷச்சாராயத்தை குடித்த 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதே போல் மோரலோஸ் மாகாணத்தில் ஒரு பெண் உட்பட 15 பேர் விஷச்சாராயம் குடித்ததால் பரிதாபமாக இறந்தனர்.

முன்னதாக கடந்த மாத இறுதியில், ஜாலிஸ்கோ மாகாணத்தில் தரக்குறைவான மது அருந்திய 25 பேரும், அகான்சே மாகாணத்தில் எரிசாராயம் குடித்த 7 பேரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகள் பட்டியலில் கியூபாவை இணைக்கத் தீர்மானம்

## ட்ரம்ப் நிர்வாக அதிகாரி தகவல்

(ஹவானா)

கியூபாவை பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நாடுகளின் பட்டியலில் இணைப்பது குறித்து அமெரிக்கா பரிசீலித்து வருவதாக டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் வியாழக்கிழமை ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் தெரிவித்தார்.

இது வோஷிங்டனுக்கும் ஹவானாவுக்கும் இடையிலான பெருகிய பதற்றமான உறவுகளுக்கு மற்றொரு பெரிய அடியாகும்.

சோசலிச வெனிசுவெலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாலும், கொலம்பியாவின் தேசிய விடுதலை இராணுவத்தின் (ELN ) கிளர்ச்சிக் குழுவின் தலைவர்களுக்கு அளிக்கும் அடைக்கலம் காரணமாகவும் கியூபாவை அமெரிக்க பயங்கரவாத தடுப்புப் பட்டியலில் மீண்டும் வைக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரி தெரிவித்தார்.

தனது பெயர் விபரங்களை வெளிப்படுத்தாது ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் பேசிய அந்த அதிகாரி, இந்த ஆண்டின் இறுதிக்குள் கியூபா குறித்த பட்டியலில் உள்வாங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டில் கியூபாவை பயங்கரவாத பட்டியலில் இருந்து முறையாக அகற்ற அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எடுத்த முடிவு, அந்த ஆண்டு இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர உறவுகளை மீட்டெடுப்பதற்கான ஒரு முக்கியமான படியாக அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# ராஜஸ்தானில் கோர விபத்து! 24 புலம்பெயர் தொழிலாளர்கள் பலி!

(டில்லி)



உத்தரப்பிரதேச மாநிலம் அவ்ரயாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ராஜஸ்தான் புலம்பெயர் தொழிலாளர்கள் 24பேர் உயிரிழந்தனர்.

ராஜஸ்தானில் இருந்து உத்தரப்பிரதேசம் நோக்கி நேற்று முன்தினம் வெள்ளிக்ழமை சென்ற லொறி ஒன்று எதிரே வந்த லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் 24 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புலம்பெயர் தொழிலாளர்கள் ராஜஸ்தானில் இருந்து தங்களது சொந்த ஊர்களுக்குச் செல்ல முயன்றபோது இந்த விபத்து ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-2)

# பண்டா கரடிகள் மீண்டும் சீனாவுக்கு

(ஒட்டாவா)

கனடாவில் மூங்கில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் 2 பண்டா கரடிகளை சீனாவுக்கே திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளதாக உயிரியல் பூங்கா நிர்வாகம் கூறியுள்ளது.

கனடா-சீனா இடையிலான 10 ஆண்டு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக கடந்த 2014ஆம் ஆண்டு சீனாவில் இருந்து 2 பாண்டா கரடிகள் கனடாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

எர் ஷைன் மற்றும் டாமாவோ என்று பெயரிடப்பட்ட இந்த 2 பண்டா கரடிகள் டொரன்டோவில் உள்ள உயிரியல் பூங்காவில் 5 ஆண்டுகளை கழித்தன. அதன்பிறகு ஆண்டு இறுதியில் கல்காரி உயிரியல் பூங்காவுக்கு இந்த பாண்டா கரடிகள் மாற்றப்பட்டன.

தற்போது கொரோனா வை ரஸ் காரணமாக கனடா-சீனா இடையிலான விமானப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் பண்டா கரடிகளுக்கு மூங்கில் கிடைக்காமல் போனது. வேறு வழிகளில் மூங்கில்களை இறக்குமதி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் எந்த முயற்சியும் பலனளிக்கவில்லை.

எனவே இரு பண்டா கரடிகளையும் சீனாவுக்கே திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளதாக கூறும் உயிரியல் பூங்கா நிர்வாகம் அரசிடம் இருந்து அனுமதி கிடைத்ததும் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (ஐ-2)


© picture alliance/dpa/Chinafotopress/Li Wei

# கண்ணுக்குத் தெரியாத எதிரியை இந்தியாவுடன் இணைந்து வீழ்த்துவோம்

## ட்ரம்ப் டுவிட்

(வோஷிங்டன்)



கொரோனா வைரஸ் என்ற கண்ணுக்கு தெரியாத எதிரியை இந்தியாவுடன் சேர்ந்து வீழ்த்துவோம் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் கோரத் தாண்டவம் ஆடி வருகிறது. உல களவில் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 45 இலட்சத்தை தாண்டி விட்டது.

அமெரிக்காவில் அதிகளவில் கொரோனா பாதிப்பும், உயிர்ப் பலியும் ஏற்பட்டுள்ளது. இதுவரை தடுப்பூசி இல்லாத கொரோனா வைரஸ்'க்கு தடுப்பூசி கண்டு பிடிக்கும் பணி நடந்து வருகிறது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் என்ற கண்ணுக்குத் தெரியாத எதிரியை இந்தியாவுடன் சேர்ந்து வீழ்த்துவோம் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், பிரதமர் நரேந்திர மோடி எனக்கு மிகவும் நல்ல நண்பர் என்பது உங்களுக்குத் தெரியும். கொரோனாவை எதிர்த்துப் போராட்டம் நடத்தி வரும் இந்தியாவிற்கு தேவையான வென்டிலேட்டர்கள் நன்கொடையாக வழங்கப்படும்.

இந்தாண்டு இறுதிக்குள் கொரோனாவுக்கு தடுப்பூசி மருந்து கிடைத்துவிடும் என நம்புகிறேன். தடுப்பூசியை உருவாக்குவதில் அமெரிக்கா இந்தியாவுடன் இணைந்து செயற்படுகிறது. கொரோனா வைரஸ் என்ற கண்ணுக்குத் தெரியாத எதிரியை இந்தியாவுடன் சேர்ந்து வீழ்த்துவோம் எனப் பதிவிட்டார். (ஐ-2)

# கொரோனாத் தடுப்பூசி உருவாக்கம்; குரங்குகளுக்கு செலுத்தி பரிசோதனை

(லண்டன்)

இங்கிலாந்து ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் கொரோனா வைரஸ் தடுப்பூசி உருவாக்கி குரங்குகளுக்கு செலுத்தி பார்த்ததில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது.

உலகமெங்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவி வருகிறது. சுமார் 45 இலட்சத்துக்கும் மேற்பட்டோரை பாதித்து, 3 இலட்சம் பேரை பலி கொண்டுள்ள இந்த தொற்றுநோய்க்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை,

அதே நேரத்தில் உலகமெங்கும் தடுப்பூசி கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் மட்டும் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

அந்த வகையில் இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் மிகப்பெரிய தடுப்பூசி கண்டுபிடிக்கும் திட்டத்தை கையில் எடுத்துள்ளது.

இந்த பல்கலைக்கழகம் கண்டு பிடித்துள்ள தடுப்பூசியை குரங்குகளுக்கு செலுத்தி சோதித்து பார்த்தனர்.

அதில் கொரோனா வைரஸைத் தடுப்பதற்கான அறிகுறிகள் தெரிய வந்துள்ளன.

அத்துடன் பாதகமான விளைவுகளின் அறிகுறிகள் எதுவும் தெரியவரவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸால் நுரையீரல் உள்ளிட்ட உள்ளுறுப்புகள் சேதம் அடைவதை இந்த தடுப்பூசி தடுக்கக்கூடியதாக அமையும் என்றும் கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்தப்பட்ட குரங்குகளின் மூச்சுக்குழாய் அழற்சி திரவம் மற்றும் சுவாசக்குழாய் திசுக்களில் கொரோனா வைரஸ் குறைந்ததைக் காண முடிந்ததாகவும் மேலும் நிமோனியாவும் வரவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அதிகளவிலான கொரோனா வைரஸ் தொற்று வெளிப்பாடிற்கு ஆளான பின்னர் 6 குரங்குகளுக்கு தடுப்பூசி செலுத்தியதில், அந்த குரங்குகளுக்கு வைரஸ் இல்லை என தெரிய வந்தது. அவற்றுக்கு தடுப்பூசியால் பாதிப்பு ஏற்பட்டதற்கு அறிகுறி எதுவும் இல்லை.

தற்போது மனிதர்களுக்கு செலுத்தி சோதிக்கப்படுகிற தடுப்பூசிக்கான ஊக்கம் அளிக்கிற அறிகுறிகளாக இது பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசி பயனுள்ளதாக இருக்குமா? என்பதை மனிதர்களுக்கு செலுத்தி சோதித்து பார்க்க வேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (ஐ-2)

# ஐ.தே.கவுடன் இணைவது சாத்தியமற்றது



## சரத் பொன்சேகா உறுதி

(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சியுடன் எதிர்காலத்தில் இணைவது என்பது சாத்தியமற்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உறுதிபடத் தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், தங்கள் ஆதரவாளர்கள் மற்றும் வாக்காளர்கள் ஐ.தே.கவுடன் இணைவதை விரும்பவில்லை என்றும் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் ரவி கருணாநாயக்க போன்றவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பற்றி சாதகமாக பேசுகிறார்கள். மேலும் அழைப்பு விடுக்கப்பட்டால் அவர்களுடன் இணைவது குறித்து பரிசீலிப்பேன் என்றும் கூட ரவி கூறியிருந்தார்.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியின் நோக்கம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை தோற்கடிப்பதே என்றும் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

மேலும் நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு முற்றிலும் எதிரானவர்கள் அல்லர். ஆனால் தற்போது அதன் தலைமைத்துவத்துடன் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கொரோனா வைரஸிற்கு எதிரான செயன்முறையில் அரசாங்கம் கையாண்ட விதம் தொடர்பாக விமர்சித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இது குறித்து இன்னும் சந்தேகம் இருப்பதாகக் கூறினார்.

தேர்தல்களை நடத்துவதில் அரசாங்கம் தற்போது மும்முரம் காட்டி வருகின்றது. ஆனால் இந்த நோயை எதிர்த்துப் பணியாற்றிய சுகாதார வல்லுநர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் ஒப்புதலுடன் மட்டுமே இது நடத்தப்பட முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாள்வெட்டிற்கு இலக்கான இளைஞன் உயிரிழப்பு!

(காத்தான்குடி)

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள கல்லடி வேலூர் பிரதேசத்தில் அடையாளம் தெரியாதோரின் வாள்வெட்டிற்கு இலக்காகி இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். இச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சம்பவத்தில் கல்லடி வேலூர் 4 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த ஆட்டோ சாரதியான 29 வயது இராமச்சந்திரன் மனோரதன் என்பவரே உயிரிழந்தார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் சம்பவதினமான நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வீட்டிலிருந்த நிலையில் சுமார் 6.30 மணியளவில் அவருடைய கையடக்க தொலைபேசிக்கு வந்த அழைப்பையடுத்து அவர் அந்த அழைப்புக்குப் பதில் அளித்தவாறு வீட்டின் பின்பகுதியான வெற்று காணிப் பகுதிக்குச் சென்றுள்ளார்.

இதன் பின்னர் சுமார் அரை மணித்தியாலத்தின் பின்னர் ஒரு சத்தம் கேட்டது. அதனையடுத்து அங்கு உறவினர்கள் சென்றபோது தலையால் இரத்தம் வழிந்த நிலையில், கீழே வீழ்ந்து உயிரிழந்த நிலையில் கிடப்பதைக் கண்டுள்ளனர்.

பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் இருவரை சந்தேகத்தில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை கைது செய்தனர். இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

## வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் தென்கிழக்கு பிராந்திய அந்தமான் கடற்பரப்பில் உருவாகியுள்ள தாழமுக்கம் காரணமாக, இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் மழை மேலும் தீவிரமடையும் என வானிலை அவதான நிலையம் எச்சரிக்கை விடுத்தது.

வங்காள விரிகுடாவில் தென்கிழக்கு பகுதியிலும், அந்தமான் கடற்பிராந்தியத்தில் தென் பகுதியில் இணைந்துள்ள கடற்பிரதேசத்தில் உருவாகியிருக்கும் தாழமுக்க பிரதேசம் தொடர்நிலை கொண்டுள்ளது.

இது மேலும் தீவிரமடைந்து வடமேற்கு திசையினூடாக நகர்ந்து கொண்டிருப்பதாக இலங்கை வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

தாழமுக்க பிரதேசத்தின் தாக்கம் காரணமாக நாடு முழுவதும் குறிப்பாக தென்மேற்கு பிராந்தியத்தில் எதிர்வரும் சில நாட்களுக்கு மழையுடனான காலநிலை அதிகரித்துக் காணப்படும்.

சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கு அதிகமான மழை எதிர்பார்க்கப்படுவதாகவும் வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியது.

அத்தோடு, நாட்டுக்கு மேலாக மணிக்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வரை காற்று வீசக்கூடும் என்றும் மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் தென் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கொழும்பு முதல் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையிலான கடற்பிராந்தியங்களில் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று அடிக்கடி அதிகரித்து வீசும் என்பதால், மீனவர்களும் கடல் சார் ஊழியர்களும் ஆழ்கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வதுடன், வளிமண்டல திணைக்களத்தின் எச்சரிக்கையை உணர்ந்து செயற்படுமாறும் வானிலை அவதான நிலையம் மேலும் தெரிவித்தது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கோபாலகிருஷ்ண பாரதியார்

நாகப்படினத்துக்குப் பக்கத்திலே நரிமணம் என்ற ஊர் இருக்கின்றது. எண்ணெய் மணம் வீசுகின்றது என்ற பெருமையும் அந்த ஊருக்கு உண்டு. சிறிது காலத்துக்கு முன்னர் இசைமணம் வீசிய பெருமையும் இந்த ஊருக்கு உண்டு. ஆமாம்!

கோபாலகிருஷ்ண பாரதியார் அந்த ஊரிலே தான் பிறந்தார். ஒருநாள் அவர் சிதம்பரத்துக்குப் போனார். கோவில் சுவரில் ஒரு சிலையைப் பார்த்தார். அந்த சிலையின் ஒரு கையில் கடப்பாரை, இன்னொரு கையில் மண்வெட்டி. அது நந்தனார் சிலை. அதைப் பார்த்து பரவசமடைந்தார். அதற்குப்பிறகு தான் அவர் சரித்திரத்தைப் பாடலாக எழுத வேண்டும் என்று தீர்மானம் செய்தார். எழுதியும் முடித்தார்.

காரைக்காலிலே ஒரு தடவை இவர் தான் எழுதிய நந்தனார் சரித்திரப் பாடல்களை காலச்சேபம் செய்து கொண்டிருந்தார். இதைக்கேட்பதற்கு ஏகப்பட்ட கூட்டம். இரவு 8 மணிக்கு ஆரம்பித்தால் அடுத்த நாள் காலை 5 மணிக்குத்தான் முடியும்.

பொதுமக்கள், வியாபாரிகள், அரசாங்க அதிகாரிகள் இப்படி எல்லோரும் அதைக்கேட்பதற்கு வருவார்கள். அரசாங்க அதிகாரிகளும் இரவு முழுக்க கண் முழிச்சு நந்தனார் சரித்திரம் கேட்டுவிட்டு காலை 10 மணிக்கு வேலைக்கு போனா கண் சுத்த ஆரம் பித்து விடும். தூங்கி வழிய ஆரம்பித்துவிடுவார்கள்.

அப்பொழுது இருந்த வெள்ளைக்கார அதிகாரி இதைப் பார்த்தார். யாராவது ஒருத்தர் தூங்கினால் என்னனென்று விசாரிக்கலாம். ஒட்டுமொத்தமாக எல்லோரும் தூங்கும் போது என்ன செய்வது? அவருக்கு தலை சுத்த ஆரம்பித்தது.

சரி என்னதான் விடயம் என்று கேட்போம் என்று ஒருத்தரை கூப்பிட்டுக் கேட்டார். "இந்த ஊருக்கு ஒரு பெரியவர் வந்திருக்கின்றார். இரவு முழுவதும் காலச்சேபம் செய்கிறார். அதை எல்லோரும் கேட்டுவிட்டு வருகிறோம். அதுதான் இப்படி" என்றார் அவர்.

உடனே அந்த அதிகாரி என்ன செய்தார் தெரியுமா? வேலைக்கு இடைஞ்சலாக இருக்கிறது என்று சொல்லி பொலிஸ் புகார் கொடுக்கவில்லை.

"அவ்வளவு பேரையும் மயங்க வைக்கிற அந்த சரித்திரம் தான் என்ன?" என்று விசாரித்தார். உடனே அன்று இரவு அவரும் அந்த இடத்துக்குப் போய் பார்த்தார். ஆயிரக்கணக்கான மக்கள்.

இவ்வளவு பேரும் சுவாரஸ்யமாக இதை ரசிப்பதைப் பார்த்தால் நிச்சயமாக இது சிறந்த பாடல்களாத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார். உடனே இதை நானே அச்சிட்டு புத்தகமாக வெளியிட்டுத் தருகிறேன் என்றார் அந்த வெள்ளைக்காரர். அப்படியே செய்தார். அவர் பெயர் சிஷே. இது தான் நந்தனார் கீர்த்தனை அச்சேறிய கதை.

கோபாலகிருஷ்ண பாரதியார் பாடிய நந்தனார் கீர்த்தனையை கேட்டுவிட்டு ஒரு வெள்ளைக்கார அதிகாரி தானாக முன்வந்து அதை அச்சிட்டுக் கொடுத்தார். இப்பொழுது நம்மில் சிலபேர் பாட்டு என்று சொல்லி எதையாவது எழுதி வைத்துவிடுவார்கள் அது புத்தகமாகவாவது உதவட்டும் என்று.

எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தர் தவறாமல் கவிதை எழுதுவார். அவர் பெயருக்கு முன்னால் தவறாமல் கவிஞர் என்று போட்டுவிடுவார். அவரிடம் சொன்னேன் ஒருநாள் ஏன் சேர் நம் முன்னோர்கள் எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள்.. அவர்கள் எல்லாம் கவிஞர், திருவள்ளுவர் என்றோ.... கவிஞர் கம்பர் என்றோ – கவிஞர் கணியன் பூங்குன்றனார் என்றோ சொல்வதில்லை. நீங்கள் மட்டும் கவிதை எழுதுகின்ற போது கவிஞர் என்று போட்டிருக்கின்றீர்களே என்றேன்.

அவர் மெதுவாக என்னிடம் வந்து நான் கவிஞர் என்று போடுவது எதற்காக என்றால் நான் எழுதியிருக்கின்றது கவிதை என்று மற்றவர்களுக்கு தெரிய வேண்டாமா? அதற்காகத்தான் என்றார்.